மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ்

ஜுலை 2019


14

## காட்சிப்படுத்துவதின் பயன்



உன் விருப்பங்களை காட்சிப்படுத்து!
அதனால் உருவாகும் ஆற்றல்
உன் கனவுகளை நிஜமாக்கும்!

நன்கொடை
₹20/-
தனிச்சுற்றுக்கு மட்டும்



# ஆசிரியரிடமிருந்து...

**கனவு - 14**-ம் இதழின் மூலம் உங்களுடன் உரையாடுவதில் மிக்க மகிழ்ச்சி!

நம் பத்திரிக்கையை அனைத்து தரப்பினரும் வெகுவாகப் பாராட்டுகின்றனர். இளையோர்களின் வாழ்க்கை இயக்கமானது சுமந்துவரும் எண்ணங்களால் மேம்படுகின்றது, மேம்படும் என்பதில் எந்தளவும் சந்தேகம் இல்லை.

“காட்சிப்படுத்துதலின் பயன்” – என்கின்ற தலைப்பில் இவ்விதழ் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

எவனொருவன், எவளொருவள் தன்னுடைய விருப்பத்தை காட்சிப்படுத்தி பார்க்கக் கற்றுக் கொள்கின்றாரோ, அவரே வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றார். காட்சிப்படுத்தும் போது அடைந்திட விரும்பும் வழிகள் நம் மனக்கண்முன் விரிகின்றன. அவ்வழிகளில் நடக்கும்போது நம்முடைய கனவுகள் நிஜமாகின்றன.

“பகல் கனவு” காண்கின்றாய் என்று நம்மை ஏளனம் செய்வோரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். கனவும் தவறல்ல, பகல் கனவும் தவறல்ல. நாம் கனவுகளை அடைந்திட வழிகளைத் தேடாத போதுதான் – கனவுகள் பிறரால் ஏளனத்திற்கு உள்ளாகின்றது.

**எப்படி வாழ விரும்புகிறாய்?**
**என்ன படிக்க ஆசைப்படுகின்றா?**
**எந்த மாதிரி உடை உடுத்த விரும்புகின்றாய்?**
**எத்தகைய உறவுகளை உனதாக்கிக் கொள்ள விரும்புகின்றாய்?**

– அனைத்தையும் காட்சிப்படுத்து...
– ஆற்றல் பிறக்கும், வழிகள் உருவாகும்...

உன் வாழ்க்கை உன் கையில்,

உங்கள் தொடர் ஆதரவிற்கு மிக்க நன்றி!

நம்பிக்கையுடன்,
**தே. சைலட் மோணி**


மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்
கனவு
இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 14
ஜூலை 2019



வெளியிடுபவர்
**தே. சைலட் மோணி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி – 620 021, தமிழ்நாடு

அச்சிடுபவர்
செந்தில் பேப்பர் மார்ட், கடலூர்
வரைகலை
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்

தலைமை ஆலோசகர்
**கிரேக் பியூ**

தலைமை ஆசிரியர்
**தே. சைலட் மோணி**

ஆசிரியர்கள்
**M.C. ராஜமணி**
**K. சுரேஷ் கன்னா**
**வசந்தி**
**A. பெர்னாடு மேரி**

நன்கொடை பொறுப்பாளர்
**J.A. ஃபெமி**


## உள்ளே...


குறிக்கோளுடன் கூடிய பகல் கனவு 2
கனவின் சக்தி 5
காட்சிப்படுத்தல் சக்தியை எவ்வாறு பயன்படுத்தவது? 7
மாற்றம் ஏற்படுத்திய 40 தலைவர்கள் 10
விண்வெளி செல்லும் கிராமத்து மாணவி 15
தண்ணீர் இடப்பெயர்வு வறுமை 17
சிறு துரும்பும் பல் குத்த உதவும் 19
வறுமையை வென்ற வைகிங் ஈஸ்வரன் 23






# காட்சிப்படுத்துதல்
## –குறிக்கோளுடன் கூடிய பகல் கனவு

அன்பான நண்பர்களே!

நம் ஒவ்வொருவருக்குள்ளும் அளவிடமுடியாத திறமைகள் புதைந்து கிடக்கின்றது. நமக்குள் இருக்கும் **ஆற்றல் வளம் (Potential)** என்பது நம்முடைய குணங்களை, திறன்களை குறிக்கின்றது. ஆனால் நம்முடைய ஆற்றல் வளங்கள் முழுவதுமாக விருத்தியாக்கப்படவும், உணரப்படவும் இல்லை. நமக்குள் அமுங்கிக் கிடக்கும் ஆற்றல் வளங்களை எதிர்காலத்தின் வெற்றிக்காக, பயன்பாட்டிற்காக நம்மால் விருத்தியாக்க முடியும். பிற வார்த்தைகளில் சொல்வது என்றால் **உன்னால் எதுவும் செய்திட முடியும்!**

நம்மால் அசாதாரணமான செயல்பாடுகளை முன் எடுத்திட முடியும். நம்முடைய வாழ்வை மாற்றியமைக்கவும். ஏன்? நாம் வாழும் இந்த உலகினை மாற்றியமைத்திடவும் **ஆற்றல் வளம் - திறமைகள்** நமக்கு உள்ளது. ஆனால் எவ்வாறு நம்மையும், உலகையும் மாற்றியமைப்பது?

மாற்றத்தை முன்னெடுப்பதற்கான எளிமையான வழி "**உன்னுடைய கனவுகளை வாழ்வது**". அதாவது பகல் கனவு காண்பது அல்லது உன்னுடைய கனவுகளை காட்சிப்படுத்துவது. நீ செய்ய வேண்டியதெல்லாம் – கண்களை மூடி, "நான் என்ன சாதிக்க போகின்றேன்? எதிர்காலத்தில் எங்கு, எவ்வாறு வாழப் போகின்றேன்?" என்பவைகளை காட்சிப்படுத்தி ரசிக்க வேண்டும், அவைகளை கனவில் வாழ ஆரம்பிக்க வேண்டும். அப்போது நீ உனக்குள் மீண்டும் மீண்டும் இந்த வரிகளைச் சொல் – **எனக்குத் திறமைகள் உண்டு, நான் என் கனவுகளை ஒருநாள் நிஜமாக்குவேன்.** நீ காட்சிப்படுத்தியவைகள் உனக்கு தினமும் புத்வேகத்தையும், திட்டமிடும் ஆற்றலையும், அதை அடைந்திட வேண்டும் என்கின்ற வேட்கையையும் உனக்குள் உருவாக்கும். உலகில் நிலவும் ஒரு பொதுவான கூற்று "**உன்னால் கனவு காண முடியும் என்றால் உன்னால் சாதிக்கவும் முடியும்**" என்பதாகும்.

### காட்சிப்படுத்த உதவுவதற்கான ஒரு சின்ன கதை

பின்வரும் கதையை உன் நண்பனைக் கொண்டு மெதுவாக, ஆழமாக, நிறுத்தி வாசிக்கச் சொல். அப்போது நீ உன் கண்களை மூடிக்கொண்டு – கதையில் வரும் வார்த்தைகளை, வாக்கியங்களை, கூற்றுகளைப் பற்றி சிந்தித்திடு.

● கண்களை மூடு. என் வார்த்தைகளின் மீது உன் கவனம் இருக்கட்டும். உன்னால் பார்க்க முடியும், உணர முடியும், நான் கூறப்போவது ஒவ்வொன்றையும் – உன்னால் கற்பனை செய்திட முடியும்.

● இது ஒரு இதமான நாள். நீ அழகிய பூங்கா ஒன்றின் வழியாக நடந்து சென்று கொண்டிருக்கின்றாய். பறவைகளின் பாடல்களை கேட்கின்றாய் – அவைகளை ரசிக்கின்றாய்.

● நீ அழகான பாதை வழியாக நடந்து செல்லும்போது, லேசாக தூரத்தில் மழை பெய்வதை உணர்கின்றாய்? அழகான வானவில் உன் தலைக்கு மேலே. வானவில்லின் கலர்களைப் பார்க்கின்றாய் – சிகப்பு, நீலம், மஞ்சள், பச்சை, ஊதா, ஆரஞ்சு – ஒவ்வொரு கலரும் அழகு, ஒவ்வொரு கலரும் பிரகாசம். வானவில் மலைக்குன்றில் ஆரம்பித்து உன் கண் முன்னால் பரந்து விரிந்து கிடக்கும் ஏரியில் விழுகின்றது.

● குளிர்ந்த காற்று உன் மேனியை வருடிச் செல்கின்றது. உனக்கு குளிரவில்லை – நீ சூடாக உணரவில்லை. இதமான வெப்பநிலை. உன் கரங்களை விரிக்கின்றாய். சூரியனின் தங்கநிறக் கதிர்கள் அவைகளில் பட்டுத் தெரிக்கின்றது. உனக்குள் பரவசம், ஆனந்தம்.

● நீ முன்னால் செல்கின்றாய். உனக்கு முன்னால் ஒரு வாசல். நீ அதை திறந்து உள்ளே செல்கின்றாய். எங்கும் பசுமை. அனைத்து மரங்களிலும், செடிகளிலும்

வண்ணமயமான பூக்கள். சில பூக்கள் உன்மேல் மெதுவாக விழுகின்றது. சூரியக் கதிர்கள் மரங்களின் ஊடாக மோதி வெளி வருகின்றது. உன் கால்களுக்கு கீழே பச்சைப் பூசிக் கிடக்கும் புல்களின் மேல் விழுகின்றது.

● உன் முன்னால் அழகான பாறையொன்று. அதன்மேல் அமருகின்றாய். மனதுக்குள் சொல்ல முடியாத ஆனந்தம். அமைதி. உன் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முகத்தில் புன்சிரிப்பின் கீறல்கள். பறவைகள் பாடுவதை மட்டும் கேட்கின்றாய். வண்டுகளின் ரீங்காரங்களும் உன்னைக் கொள்ளைக் கொள்கின்றது. மரங்கள் காற்றின் பாடலுக்கு ஆடுகின்றது.

● நீ உணருகின்றாய், ஆசைப்படுகின்றாய் – இது இன்று முதல் என் தோட்டமாக இருக்கட்டும் என்று. அப்போது தான் நீ அடிக்கடி இந்த பூங்காவிற்கு வரமுடியும் – மகிழ்ந்திருக்க முடியும் – உன்னை அமைதிப்படுத்த முடியும் – உனக்குள் சமாதானத்தை உணர்ந்திட முடியும்.

● இப்போது மெதவாக உன் கண்களைத் திறந்திடு... உன்னால் அழகிய பூங்காவினை காட்சிப்படுத்த முடிந்ததா?! நீ வித்தியாசமாக உணர்ந்தாயா? வாசித்தத்தின் படி உன்னால் கற்பனைச் செய்திட முடிந்ததா?

இத்தகைளை செயல்பாடுகளை தான் நாம் காட்சிப்படுத்துதல் – நமது ஊர் மொழியில் சொல்வதென்றால் பகல்கனவு காணுதல் என்கின்றோம். காட்சிப்படுத்தியதை நிஜம் என்று நீ நம்பும்போது, அது உனக்குள் நிஜமான ஒரு எண்ணத்தை உருவாக்கின்றது. நீயும் அதை நம்பிடத் துவங்குகின்றாய். உன் கனவுகளை / எண்ணங்களை எவ்வாறு காட்சிப்படுத்திட வேண்டும் – என்று இப்போது உனக்குப் புரிகின்றதா?

அழகிய பூங்காவில் பறவைகளின் குரலை ரசித்தாய், வானவில்லின் வண்ணத்தில் மகிழ்ந்தாய், இளங்குளிர் காற்று உன்னைத் தடவிடும் போது ஆனந்தப்பட்டாய். இப்போது – உன் கனவு படிப்பினை, வேலையை, தொழிலை கற்பனை செய். நீ விரும்பிய பாடத்தை விரும்பிய கல்லூரியில் படிப்பதாகவும், அப்பள்ளியில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதாகவும், நீ ஆசைப்பட்ட தொழிலைத் தொடங்கி பல பேருக்கு வேலை கொடுப்பதாகவும், நீ கனவு கண்ட வேலையில் மகிழ்ந்திருப்பது போல, ஏழை மாணவ – மாணவியருக்குப் பள்ளிக்கூடம் ஆரம்பித்து உதவுவது போலவும், உன்னுடைய தனிப்பட்ட எண்ணங்கள் / கனவுகள் ஏதுவாக இருந்தாலும் அவைகளை காட்சிப்படுத்திப் பார். காட்சிப்படுத்துதல் உனக்கு உற்சாகம் கொடுக்கும், உன்னை ஊக்குவிக்கும், கடினமாக உழைத்திடத் தூண்டும், அர்ப்பணிக்க உதவும் – உன் கனவுகளை அடைந்திட முடியும் என்கின்ற நம்பிக்கையைக் கொடுக்கும்.

## கூட்டாளருடனான செயல்பாடு

உன்னுடைய கூட்டாளருடன் **காட்சிப்படுத்தும்** – இப்பயிற்சியை செய்திடு. உன்னில் ஒருவர் A. இன்னொருவர் B. நீங்கள் இருவரும் ஒரு தாளில் படம் வரைந்திடப் போகின்றீர்கள். நீங்கள் விரும்பிய எதையும் வரையலாம். இரண்டு நிமிடம். நீங்கள் என்ன வரைந்திடப் போகின்றீர்கள் என்பதை உங்கள் கூட்டாளியுடன் இப்போது பகிர்ந்திட வேண்டாம். நீங்கள் வரைவது ரகசியமாக இருக்கட்டும்.

இப்போது, நபர் A ஒரு பேப்பர், பேனா கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். நபர் B தான் வரைந்ததை வார்த்தைகளால் நபர் A–க்கு எடுத்தக் கூறவேண்டும். தான் வரைந்திட்ட படத்தினை காண்பிக்கக் கூடாது. நபர் A, நபர் B கூறுகின்றபடி படத்தினை வரைந்திட வேண்டும். நபர் A வரைகின்றபோது ஏற்படும் சந்தேகங்களை B-யிடம் தாராளமாக கேட்கலாம். வரைந்து முடித்த பிறகு A – B-யிடம் தான் வரைந்ததைக் காண்பிக்க வேண்டும். B-யின் வரைபடமும், நபர் A, B சொல்வதின்படி வரைந்த படமும் ஒன்றாக உள்ளதா? அல்லது வித்தியாசமாக உள்ளதா? வித்தியாசமாக உள்ளது என்றால் என்ன வித்தியாசம்? வித்தியாசம் அதிகமாக இருந்தால் B – தன்னுடைய வரைபடத்தை தெளிவாக சொல்லவில்லை என்று கொள்ளலாம்.

இப்போது B - A கூறுவதுபடி வரையட்டும். B வரைந்ததையும் A வரைந்ததையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மீண்டும் செய்து பாருங்கள்.

**உன் கனவை நம்பு; கனவினை வாழ்வது போல் காட்சிப்படுத்து; அது தரும் சுகத்தை அனுபவி; உன் கனவினை அடைந்திடு.**

உன் வாழ்வில் நீ அடைந்திட விரும்புவதை, வாழ்ந்திட விரும்புவதை **காட்சிப்படுத்து - அதில் வாழ் - அதன் அனுபவத்தை தாளில் குறித்திடு.** இந்த இதழ் உன் கனவுகளை நிஜமாக்கிட பல செய்திகளை கூறவிருக்கின்றது. உன்னை நம்பு, உன் கனவுகளை நம்பு. நீ காட்சிப்படுத்தியபடி வாழ முடியும் – அதற்கான திறமை உனக்கு இருக்கின்றது என்பதை நம்பு. நிஜம் கனவில் தான் ஆரம்பமாகின்றது. **கனவு காண், காட்சிப்படுத்து, பகல் கனவு நல்லது தான் நீ அதில் மட்டுமே வாழ்ந்திடாமல் இருக்கும் வரை.**

உன் வாழ்வில் அக்கறையுள்ள,

கிரேக் பியூ

செயல் தலைவர், Visions



நண்பர்கள் தவறு செய்தால் மன்னித்துவிடாதே – மறந்துவிடு... ஏனெனில் அவர்கள் உன் உறவுகள் அல்ல, உணர்வுகள்!

# கனவின் சக்தி





■ முனைவர் க. பழனித்துரை

இன்றைய இந்தியாவின் சொத்தாகவும், பாரமாகவும் இருப்பவர்கள் நம் இளைஞர்கள். யார் சொத்தாக விளங்குகிறார்கள்? தன்னம்பிக்கையுடன் செயல்படக் கூடிய இளைஞர்கள் இந்தியாவின் சொத்துக்கள். இவர்கள் எப்படி இருப்பார்கள்? இவர்களின் குணங்கள் என்னென்ன? இவர்கள் எப்படி உருவாகின்றார்கள்? அல்லது எப்படி உருவாக்கப்படுகின்றார்கள்? என்பதைப் புரிந்து கொண்டால் நாம் எளிதாக நமக்கு அருகாமையில் இருக்கக்கூடிய இளைஞர்கள் சொத்தா அல்லது பாரமா என்பதை நாம் கண்டு பிடித்து விடலாம்.

தன்னம்பிக்கை உடையவர்களுக்கு தன்னைப் பற்றிய பார்வை மற்றும் புரிதல் இருக்கும். தனக்கு இருக்கும் ஆற்றல், செயல் திறன், ஆளுமை, அறிவு, பலம், பலவீனம் இவைகள் பற்றி ஒரு தெளிவு இரக்கும். இந்தத் தெளிவு ஒருவருக்கு வந்துவிட்டால் அந்த மனிதன் வாழ்க்கையின் உச்சத்தைத் தொட கனவு காண ஆரம்பித்து விடுவார்.

கனவு என்பது சாதாரண அபிலாஷைகள் அல்ல. அது சாதனைக் குறியீடு. அது ஒரு வாழ்க்கையின் இலக்கு. அது சாகசத்தைத் தூண்டும் மந்திரக் கோல். கனவு சாதிக்கத் துடிப்பவனை தொய்வின்றி ஓடுவதற்குத் தூண்டும் ஒரு மகா சக்தி.

கனவை மெய்ப்பிக்க அந்த மனிதர் திட்டமிட வேண்டும். அந்தத் திட்டம் கட்டுவதற்கு பொறியியல் வல்லுனர்கள் தயாரிக்கும் ஒரு திட்ட வரையறை போன்றது. ஒட்டு மொத்த கட்டிடத்தின் ப்ளூபிரிண்ட் அல்லது கட்டிடத்தின் டிசைன் அல்லது வரைபடம். அதேபோல் தான் தான் என்ன சாதிக்க வேண்டும் என்று எண்ணுகின்றாரோ, அதை சாதிக்க தயாரிக்கும் ஒரு திட்டம் இந்தச் செயல்பாடு என்பது அறிவியல் பூர்வமானது.

கனவு சாகசத்தைத் தூண்டும் மந்திரக் கோல். கனவு சாதிக்கத் துடிப்பவனை தொய்வின்றி ஓடுவதற்குத் தூண்டும் ஒரு மகா சக்தி.

மந்திரம் செய்து உருவாக்குவது அல்ல. சிந்தனை செய்து உருவாக்குவது தான் அந்தத் திட்டம். இப்படிப்பட்டத் திட்டத்தை யாரால் உருவாக்க முடியும் என்றால், மன உறுதி கொண்டவர்களால் மட்டுமேதான் உருவாக்க முடியும். அந்த மன உறுதி படைத்தவனுக்கு அன்றாய்டு போன் எந்த உத்வேகத்தையும் கொடுப்பதில்லை. அவன் உறுதி என்பது தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது. இதற்கு மிக முக்கியமானது தன்னுடைய உடல் மனம் இவை இரண்டையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு குணத்தை வளர்த்தெடுத்திருக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் **Will Power,** முடியும் என்ற சக்தியை தன் உடலில், உள்ளத்தில் வளர்த்து வைத்திருப்பது. அந்த சக்தி ஒருவருக்கு வளர்ந்து விட்டால், சாதாரண கேளிக்கை சார்ந்த இலட்சியங்கள், குறிக்கோள்கள் அனைத்தும் மறைந்துவிடும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நம் இளைஞர்கள் உணர்வு நிலையில் சாதாரண விஷயங்களையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வரும் சூழலை நாம் பார்த்து வருகிறோம். இவர்களால் ஒரு தேசத்திற்கு எந்தவித பெரிய நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

கனவுலகத்திற்குள் நம் இளைஞர்களை அழைத்துச் செல்வது மிகவும் முக்கியமானது. அவர்களை கனவுலகில்

சஞ்சரிக்க வைப்பதற்கு இளைஞர் நலம் சார்ந்து செயல்படும் நிறுவனங்களுக்கு ஆற்றலும் சக்தியும் வேண்டும். கனவுலகில் நம் இளைஞர்கள் உலாவும்போது அவர்களுக்கு வழிகாட்ட நிறுவனங்கள் உதவிட வேண்டும்.

> கனவுலகில் சஞ்சரிக்கும் மனிதருக்கு செயல்பாட்டில் நிறைவும், முடிவும் இருக்காது.... தொடர்ந்து செயல்பாட்டில் வைத்திருக்கும்.

கனவு கேள்விகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும். கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சியில் அவர்கள் இருக்கும்போது, விடைகளைத் தேடிட அவர்களுக்கு உதவிடத்தான் நிறுவனங்களும் வழிகாட்டிகளும் தேவை. கனவுக்குள் செல்லும்போது, சிந்தனைத் தொழிற்சாலையாக அந்த மனிதனின் உடல், மனம், மூளை மாறிவிடும். கனவுலகில் சஞ்சரிக்கும் மனிதருக்கு செயல்பாட்டில் நிறைவும், முடிவும் இருக்காது. அது அந்த மனிதரை தொடர்ந்து செயல்பாட்டில் வைத்திருக்கும். எனவே அவர் ஓய்வறியா மனிதராக மாறிவிடுவார்.



இவர் அடிப்படையில் எதையாவது செய்யவேண்டும் என்ற ஆவல்கொண்ட மனிதராக இருப்பார். கடின உழைப்பிற்கு தயாரானவராக இருப்பார். அவருக்கு கை கொடுத்து, நெறிப்படுத்தி, உரிய தடத்தில் இயங்க வைக்கத்தான் நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. முறையான நிறுவனங்களின் செறிவான வழிகாட்டுதல் கிடைக்குமேயானால். அந்த மனிதர், மாமனிதராக மாறிவிடுவார். இல்லையேல் கனவின் விளிம்பில் பிரவேசித்து விட்டு, முயன்றேன் தோற்றுவிட்டேன், எனக்கு அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை என்று விளக்கமளித்து விட்டு சாதாரண மனிதராக வாழப் பழகிக் கொண்டுவிடுவார்.

கனவுத் தொழிற்சாலைக்குள் அந்த மனிதர் இயங்குவதற்கு தன்னைக் கட்டுப்படுத்தும் சுய சக்தியை வளர்த்தெடுக்க முறையான பயிற்சியை அளித்திருக்க வேண்டும். இல்லையேல் கனவுத் தொழிற்சாலை அவர்களுக்கு கொடுக்கும் சவால்களை சமாளிக்க முடியாமல் கனவுலகிலிருந்து வெளியேறி விடுவார்கள்.

தன்னைக் கட்டுப்படுத்தும் பயிற்சியைப் பெறப்பெற அந்த மனிதர் சாகசக் கூண்டுக்குள் பிரவேசிக்க ஆரம்பித்து விடுவார். அப்பொழுது, சாதாரண மானுட வாழ்க்கை, அவர்களுக்கு சலிப்புத் தட்டும், வெறுப்பை உருவாக்கும். இந்த நிலை வந்துவிட்டால் அவர்கள் அனைவரும் மிகப்பெரிய சவால்களாக தங்களை நெறிப்படுத்தும் நிறுவனங்களுக்கு மாறிவிடுவார்கள்.

ஒரு நிலையில் தங்களுக்கு தாங்கள் வழிகாட்டிகளாகவும் மாறவிடுவார்கள். அத்துடன் வழிகாட்டும் நிறுவனங்களுக்கும் உதவிடும் நிலைக்கு மாறிவிடுவார்கள். எனவே இந்த "**Will Power**" விஞ்ஞானத்தைக் கற்றுக் கொள்ள முனைந்தால் மட்டுமே கனவுலகில் நின்று வெற்றி சாதனைகளை நிகழ்த்துவார்கள். இவர்கள்தான் எண்ணிய எண்ணியாங்கு எய்தக் கூடியவர்கள். இந்த செயல் என்பது சினிமா பார்ப்பது போல நடைபெறும் நிகழ்வல்ல, திருவிழா பார்க்கும் நிகழ்வு போல நடப்பதல்ல.

இந்த நிகழ்வு ஒரு தீக்குள் செயல்படுவது போல தங்கள் எண்ணத்தில், நடத்தையில், செயல்பாட்டில் வலிந்து மாற்றங்களைக் கொண்டு வருவதால் மட்டுமே சாத்தியப்படும் என்பதை புரிந்து நம் இளைஞர்கள் கல்வி சான்றிதழ் வாங்க நிறுவனங்களில் காலத்தைக் கழிப்பதை விட, தன்னம்பிக்கையுடையவராக தன்னை உருவாக்கிக் கொள்ள முயற்சிப்பது மட்டுமே ஒருவனுக்கு வாழ்வளிக்க முடியும்.

கனவின் சக்தி அளவிடமுடியாதது. அது சாகசத்தக்கான கனவாக இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அதற்கு ஒரு உள்ளுணர்வும், அதற்கு வழிகாட்ட நிறுவனமும் கிடைத்துவிட்டால் சாதனைக்குப் பஞ்சமேது. இந்த இரண்டும் இல்லாத சூழலில்தான் நம் இளைஞர்கள் நமக்கு பாரமாக வந்து விடுகின்றனர்.


என் முயற்சிகள் என்னைப் பலமுறை கைவிட்டதுண்டு... ஆனால், நான் ஒருமுறைகூட முயற்சியைக் கைவிடவில்லை – எடிசன்

◆தே. சைலட் மோனி

# காட்சிப்படுத்துதல்-சக்தியை எவ்வாறு பயன்படுத்துவது?



நம்முடைய பெற்றோர்கள், நமது உறவினர்கள், ஏன் நமது நண்பர்கள்கூட பல நேரங்களில் **பகல் கனவு காணாதே** என்ற நம்மை எச்சரித்துள்ளனர். எனவே, **பகல் கனவு** என்பது நமது மனத்திற்குள் எதிர்மறையாகவே பெரும்பாலும் பதிவாகியுள்ளது. இந்தத் தவறான எண்ணத்தில் இருந்து வெளிவர நாம் பகல் கனவு என்கின்ற பதத்திற்கு பதிலாக **காட்சிப்படுத்துதல்** என்கின்ற பதத்தை உபயோகிப்போம்.

நீ என்ன படிக்கப் போகின்றாய்? எங்கு படிக்கப் போகின்றாய்? நீ படித்திட அமரும் இடம் எவ்வாறு இருக்கும்? பள்ளியில் , கல்லூரியில் எந்தவிதமான நிகழ்வுகளில் கலந்து கொள்வாய்? நீ எவைகளைச் சாதிப்பாய்? உன் ஆண், பெண் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள்? எவ்வாறு உன்னுடன் அவர்கள் பழகுவார்கள்? பிரச்சனைகள் சில வருகின்றது – எவ்வாறு அவைகளைக் கையாள்வாய்? எப்படி கை குலுக்குவாய்? உன்னை உன் ஆசிரியருக்கு, நண்பருக்கு எவ்வாறு அறிமுகம் செய்வாய்? எந்தவிதமான உடைகளை அணிவாய்? என்ன உணவுகளை உண்பாய்? – காட்சிப்படுத்து, மனம் அதில் சுகம் காணட்டும். ஏற்படும் உணர்வுகள் உன்னை ஆட்கொள்ளட்டும். **உனக்குள் சக்தி உருவாகும்.**

உன் குடும்ப வாழ்க்கை எவ்வாறு அமையப் போகின்றது? காட்சிப்படுத்து. நீ விரும்பும் கணவன், மனைவி எவ்வாறு இருக்க வேண்டும்? உன் வீடு எப்படியிருக்க வேண்டும்? உன் வீட்டுப் பூங்கா, காய்கறித் தோட்டம் எவ்வாறு இருக்கும்? எத்தனைக் குழந்தைகள்? எங்கு படிக்க வைப்பாய்? மனைவியிடம் / கணவனிடம் ஏற்படும் மனஸ்தாபங்களை எவ்வாறு களைந்திடுவாய்? பிள்ளைகளிடம், உன் துணையிடமும் எத்தகைய சொல் உபயோகங்கள்? நீ எங்கு குடும்பத்தோடு செல்வாய்? வேலை முடிந்து வீட்டிற்கு வரும் கணவன்/மனைவியை எவ்வாறு வரவேற்பாய்? காட்சிப்படுத்து! ஆர்வம் வரும், உன் வாழ்க்கையை நீ வடிவமைக்கத் துடிப்பாய். அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பாய்.

நீ விரும்பும் வேலையைக் காட்சிப்படுத்து! எந்த இடத்தில், எப்படிப்பட்ட வேலை? யாரெல்லாம் உன்னுடன் பணியாற்றுவார்கள்? எத்தகையை உடை அணிந்து செல்வாய்? என்ன உணவு, யாருடன் அமர்ந்து உணவு உட்கொள்வாய்? வாங்கும் சம்பளம் எவ்வளவு? எவ்வாறு அதை செலவழிப்பாய்? எவ்வளவு சேமிப்பாய்? எப்படிப் பட்டவர்களுடன் நட்பு பாராட்டுவாய்? உன் மேல் அதிகாரிகளுடன் எத்தகைய உறவு கொண்டிருப்பாய்? உன் கீழ் பணியாற்றுபவர்களை எவ்வாறு நடத்துவாய்? அவர்கள் தங்கள் பணிகளை சிறப்பாக செய்திட எத்தகைய உற்சாக வார்த்தைகளைப் பயன்படுத்துவாய்? – காட்சிப்படுத்து, சக்தி பிறக்கும். நீ விரும்பும் வேலையை அடைந்திட தீவிரமாக உழைத்திட மனவலிமை உருவாகும்.

உன் நண்பர்களை காட்சிப்படுத்து! எத்தகையை நண்பர்கள் உனக்கு வேண்டும்? அவர்களோடு எத்தகைய உறவுகள் கொண்டிருப்பாய்? எப்போது, எங்கு, எவ்வாறு சந்திப்பாய்? என்ன பேசுவாய்? யாருடன் எவைகளைப் பகிர்ந்து கொள்வாய்? யாருக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுப்பாய்? எந்த நிகழ்வுகளுக்கு எல்லாம் சேர்ந்து போவீர்கள்? எத்தகைய கெட்ட பழக்கங்களை தவிர்ப்பாய்? – காட்சிப்படுத்து! நல்ல நட்பு உருவாகும். நீடித்து நிற்கும். உனது வாழ்வுக்கு மெருகூட்டுவதாக அமையும்.

உன் உறவினர்களுடனான உறவுகளைக் காட்சிப்படுத்து. ஆயிரம் உறவுகள் உனக்கு இருக்கும். ஆனால், எல்லா உறவுகளும் நமது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தாது. நீ விரும்பும் உறவுகள் யாவை? அவர்களோடு எத்தகைய உறவுகளை பேணப் போகின்றாய்? எப்போதெல்லாம் சந்திப்பாய்? என்ன பரிசளிப்பாய்? அவர்களின் பிறந்தநாள், திருமண நாள் இவைகளைக் குறித்து வைத்து அந்த நாட்களில் என்ன செய்திடுவாய்? உறவுகளில் விரிசல் வரும்போது எவ்வாறு தீர்வு காண்பாய்? நீ தவறு செய்தால் எவ்வாறு மன்னிப்பு கோருவாய்? – காட்சிப்படுத்து! நல்ல உறவுகள் வலுப்பெறும். புதிய உறவுகள் உருவாகும்.

உணவு – என்ன சாப்பிட ஆசை? எவ்வாறு சமைத்திடப் போகின்றாய்? எங்கு அமர்ந்து உண்பது உனக்குப் பிடிக்கும்? உடை – என்ன உடை உடுத்த விரும்புகின்றாய்? – காட்சிப்படுத்து!

ஒவ்வொரு நாளையும் காட்சிப்படுத்திப் பார். இன்று நான் என்ன செய்யப் போகின்றேன்? யாரையெல்லாம் பார்ப்பேன்? எவ்வாறு நடந்து கொள்வேன்?

நாம் விரும்புவதைப் போலேவே நடித்துப் பார்த்திருக்கின்றோம். நான் ஆசிரியராக, டாக்டராக என்னை கற்பனை செய்து காட்சிப்படுத்திப் பார்த்திருக்கின்றேன். மாணவர்களை அடித்திருக்கின்றேன். பாசமாக பேசியிருக்கின்றேன், டாக்டராக இலவசமாக மருத்துவம் பார்த்திருக்கின்றேன், நோயாளிகளுடன் கண்டிப்புடன் நடந்துள்ளேன். இத்தகைய காட்சிப்படுத்துதல் என்னை சிறப்பாக படிக்கத் தூண்டியுள்ளது. நிறைய வாசிக்க, எழுத எனக்கு உற்சாகம் ஊட்டியுள்ளது. உங்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் நிச்சயமாக இருக்கும்.

காட்சிப்படுத்துதல் – நம்மை வலிமைப்படுத்தும். முயற்சி செய்யத் தூண்டும் – நமது கனவினை வாழ்ந்திட நமக்கு உறுதுணையாக இருக்கும்.

## காட்சிப்படுத்தலும் ஈர்க்கும் சட்டமும் Law of Attraction

நீங்கள் உங்கள் கனவினை அல்லது எண்ணத்தினை தொடர்ச்சியாகக் காட்சிப்படுத்தும்போது – அது உங்களிடம் ஈர்க்கப்படுகின்றது. ஒரு செயல் தவறாகப் போகிறது என்று – காட்சிப்படுத்திப் பார்க்கும்போது என்ன தவறாகிப் போனது? ஏன் தவறானது என்பதினை நாம் அடையாளம் காண முடியும்.

காட்சிப்படுத்துதல் – தரும் மகத்தான படைப்பு சக்தியை நீங்கள் உங்கள் நலனுக்காக பயன்படுத்த முடியும்.

நீ விரும்புவதை காட்சிப்படுத்தும்போது – அந்த கனவினை நனவாக்குவதற்கு நீ செய்ய வேண்டியவைகளை உணருவாய், செய்திட ஆரம்பிப்பாய். உன்னுடைய மனது – உனக்கு கட்டளைகளை பிறப்பிக்கும். (உ–ம்) யாருடன் பழக வேண்டும், வாய்ப்புகளை எப்படி பயன்படுத்த வேண்டும்.



## காட்சிப்படுத்தல் தரும் வலிமை / சக்தி

என்னால் 200 கி.மீ. தூரம் பைக்கில் செல்வதை, மேடையில் நிகழ்ச்சி ஒன்றை தொகுப்பதை, நல்ல சுவரோவியம் வரைவதை – கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை – என்று பிறர் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர்கள் ஒருபோதும் இந்த விஷயங்களை அடையப் போவதில்லை. ஏனென்றால் அவர்கள் தாங்கள் அடைய விரும்புவதை காட்சிப்படுத்திப் பார்ப்பதில்லை.

முதலில் உருவாக்கப்பட்ட அல்லது அடையப்பட்ட அனைத்தும் ஒருவரின் மனதில் ஒரு யோசனையாக தொடங்கியவைதான். பொதுவாக ஒரு தேவையின் அடிப்படையில், அல்லது ஆசைப்பட்டு – ஒரு நபர் ஒரு எண்ணத்தை தன்னுடைய மனதில் காட்சிப்படுத்துகின்றார். மனதில் காட்சிப்படுத்தியதை வடிவமைக்க தன்னுடைய முழுமையான மனவலிமையையும் உபயோகிக்கின்றார். மனவலிமையும், உணர்வுகளும் கைக் கோர்க்கின்றன. காட்சிப்படுத்துதல் அசைக்க முடியாத விருப்பத்தை உருவாக்குகின்றது. அந்த ஆசை/விருப்பம் காட்சிப்படுத்துதலால் உருவான மனவலிமை, சாதகமான உணர்வுகள் தன்னுடைய கனவினை நனவாக்க அனைத்து முயற்சிகளிலும் அவரை இறங்க வைக்கின்றது. சாதனைகள், மாறுதல்கள் – இவ்வாறுதான் உருவாகின்றது.

இத்தகைய காட்சிப்படுத்துதல் தான் – நீ அமர்ந்திருக்கும் நாற்காலியை உருவாக்கியது, நீ ஓட்டும் காரை உருவாக்கியது, கம்ப்யூட்டரை வடிவமைத்தது, செல்போனை கண்டுபிடிக்க வைத்தது, விரும்பும் தொழிலில் ஈடுபட வைத்தது.

நீ விரும்பும் ஓர் எண்ணம், நீ தாளில் எழுதிய யோசனை, உனக்கு முன் ஒரு காட்சியை, உணர்வுகளை, படத்தை, கற்பனை அனுபவத்தை உருவாக்குகின்றது. இப்போதுகூட நீ இந்தக் கட்டுரையை வாசிக்கும்போது, அது காட்சியாக உன் மனதிற்குள் விரிகின்றது, அப்படித்தானே!

உண்மையில் நாம் நமது கவலைகளை காட்சிப்படுத்துவதில் வல்லவர்கள். நாம் மோசமான சூழ்நிலையைக் காட்சிப்படுத்தி – அச்சூழலில் இருந்து வெளிவருவதற்கான சக்தியை பெற்றிட முடியும். காட்சிப்படுத்துதல் கொடுக்கும் சக்தியை பயன்படுத்த ஆரம்பிக்கும்போது – நாம் விரும்புவதை நம்மால் அடைந்திட முடியும்.

உங்கள் உடலின் அடிப்படையில் இதைப் பற்றி சிந்தியுங்கள். நீ செய்திடும் ஒவ்வொரு உடல் அசைவும் – முதலில் உன் மனதில் காட்சியாக உருவாக்கப்படுகின்றது. இடது புறம் திரும்ப வேண்டும், பேனாவை எடுக்க வேண்டும், பாட வேண்டும், மூக்கை சீந்த வேண்டும் என அனைத்து உடல் அசைவும் – நமது ஆழ்மனதிலோ, நினைவாகவோ நம் மனதில் காட்சிப்படுத்தப்பட்டுதான் நடைமுறைக்கு வருகின்றது.

**நீ வாழ்வில் அடைய விரும்புபவைகளும் முதலில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.**

உன்னுடைய செயல்பாடுகளில் வெற்றி பெறுவதற்கான திறவுகோல் – நீங்கள் விரும்புவதை காட்சிப்படுத்துவதாகும். விளையாட்டு வீரர்கள் இதை எப்போதுமே செய்கின்றார்கள். எவ்வாறு நிற்பது, எந்த அளவிற்கு குனிவது, கால்களை எவ்வாறு வைப்பது – என்று ஒவ்வொரு ஓட்டப்பந்தய வீரனும் காட்சிப்படுத்திப் பார்க்கின்றார்கள். இத்தகைய காட்சிப் படுத்துதல் அளவிட முடியாத ஆற்றலை அவர்களுக்குக் கொடுக்கின்றது.

நீங்களும் காட்சிப்படுத்தலாம். அதற்கான சில படிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



## 1 நீங்கள் விரும்புவதை நேசிக்கவும்

நீங்கள் விரும்புவதைப் பற்றி நீங்கள் உண்மையில் உற்சாகமாக இல்லாவிட்டால் நீங்கள் நேர்மறையான முடிவுகளை பெறமாட்டீர்கள். உங்கள் காட்சிப்படுத்தலுக்கு பின்னால் உந்து சக்தியாக இருப்பது உங்கள் உணர்ச்சிகள். உங்கள் இலக்குகளுக்கு உங்கள் ஆர்வத்தை கொடுங்கள். காட்சிப்படுத்தல்கள் உருவாக்கும் விளைவுகளுடன் ரொம்பவும் இணைந்திருக்க வேண்டாம். ஏனென்றால் நாம் எதிர்பாராத நல்ல விளைவுகள் உருவாக வாய்ப்புகள் உண்டு.


## 2 உடனடி நடைமுறையாக்கத்திற்கு உங்கள் எண்ணங்களை அடிக்கடி காட்சிப்படுத்துங்கள்




நீங்கள் காட்சிப்படுத்தியதை அரை நிமிட நேரம் தொடர்ந்து நினைவில் கொண்டிருக்க முடிந்தால் நீங்கள் அதை நோக்கி ஈர்க்கப்படுகின்றீர்கள். நீங்கள் அனுபவமிக்க தியானியாக இல்லாமல் இருந்தால் நீங்கள் உருவாக்கிய காட்சியை அரை நிமிடத்திற்கு மேலாக உங்களால் வைத்திருக்க முடியாது. எனவே அடிக்கடி காட்சிப்படுத்தினால் சக்தி பிறக்கும்.


**நன்கொடைகள் / விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 5,000/– |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 10,000/– |
| பின் அட்டை உள்ப்பக்கம் (மல்டி கலர் | ரூ. 5,000/– |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 2,000/– |
| உள் அரை பக்கம் ஒரு கலர் | ரூ. 1,000/– |


## 3 உங்கள் காட்சியை / வரைபடத்தை முடிந்த அளவிற்கு விரிவானதாக்குங்கள்

தெளிவற்ற காட்சிப்படுத்துதல் – தெளிவற்ற விளைவுகளையே / முடிவுகளையே உருவாக்கும். நாம் அடைந்திட விரும்புவதை முடிந்தளவிற்கு விரிவாகக் காட்சிப்படுத்துவது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

## 4 நம்புங்கள்



நம்புதல் மிகவும் அவசியம். நம்புவதற்காக உங்கள் மீது அழுத்தம் கொடுக்காதீர்கள். குழந்தைகளின் அணுகுமுறையை எடுத்துக் கொள்ளுங்கள். தங்களுடைய படுக்கைக்கு கீழே பூதம் இருப்பதாக 100% நம்புகின்றார்கள். வீட்டில் பேய் இருப்பதாக 100% நம்புகின்றார்கள். தாங்கள் ஒவ்வொருவரும் இளவரசர்கள், இளவரசிகள், கொள்ளையர்கள், நல்லவர்கள் என 100% நம்புகின்றார்கள்.

மனதிற்குள் திரைப்படம் (காட்சிகள்) ஓடும்போது அதில் மூழ்கி போங்கள். நம்புங்கள். நீங்கள் காட்சிப்படுத்தாதபோது உங்களுக்கு ஏதேனம் சந்தேகம் வந்தால், உங்கள் கனவை மறந்துவிட்டு – காட்சிப்படுத்துதலில் ஈடுபடுங்கள். அது வலிமையைக் கொடுக்கும் – வழிகாட்டும்.

## 5 உங்கள் காட்சிகளை தட்டிக் கொடுப்பதின் மூலம் உறுதியான நேர்மறை வாக்கியங்களோடு வலுப்படுத்துங்கள்




இது உங்கள் ஆழ்மனதில் உள்ள காட்சிகளை ஏற்றுக் கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும். நீங்கள் கற்பனை செய்ததைத் தேடுவதற்கான கட்டளையை உங்கள் மனம் பெறும்போதே –மாற்றம் நிகழ்கிறது, காட்சிகள் நிஜமாகிறது.

விதி மிகவும் எளிதானது: நீங்கள் எதை கருத்தரிக்க முடியுமோ/ காட்சிப்படுத்த முடியுமோ அதை நீங்கள் அடையலாம். மேலே குறிப்பிட்ட படிகளைப் பின்பற்றவும். உங்கள் கனவுகளை / எண்ணங்களை நிறைவேற்றுவதற்கான அற்புதமான வழிகள் பிறக்கும்.

**எண்ணம்போல் – காட்சிப்படுத்துதல் போல் – வாழ்வு!**

நன்றி : Mindvalley - January 10, 2018




# உலகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய 40 தலைவர்களைத் தெரிந்து கொள்வோம்

## இவ்விதழில் 13 தலைவர்களை மிகவும் சுருக்கமாகக் காண்போம்!

## ஒவ்வொருவரையும் பற்றி நீங்கள் அதிகமாக வாசியுங்கள், சிந்தியுங்கள்!

### 1 சாக்ரடீஸ்




**உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி,
உன் செயல்கள் இருக்கும்.
உன் செயல்களுக்கு ஏற்றபடி
உன் வாழ்க்கை இருக்கும்.**

சாக்ரடீஸ் கி.மு. 5-ம் நூற்றாண்டில் (கி.மு. 470-399) வாழ்ந்த ஒரு கிரேக்க தத்துவஞானி. இவர் ஏதென்ஸ் நகரில் பிறந்தார். உலகின் முதல் தத்துவ ஞானி என்று சாக்ரடீஸ் போற்றப்படுகிறார். கடவுள் என்பவர் யார்? என்கிற கேள்வியை மதவாதிகளை நோக்கிக் கேட்டவர். அதனால் இவரை உலகின் முதல் பகுத்தறிவாளர் என்கின்றனர். எதையும் கேள்விகள் கேட்டே உண்மையை அறிய வேண்டும் என்பதே இவரின் குறிக்கோளாக இருந்தது. பொது இடங்களில் மக்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் பகுத்தறிவு கருத்துக்களைப் பரப்புவதில் அதிக நேரங்களை செலவிட்டார். மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க அவர்களிடமே பல கேள்வி மேல் கேள்வி கேட்டு, அதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளுமாறு செய்தார்.

சாக்ரடீஸின் எழுத்துக்களும் சொற்பொழிவும் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. மூடக் கொள்கைகளில் மூழ்கி இருந்த இளைஞர்களை சிந்திக்கத் தூண்டி அவைகளுக்கு எதிராக செயல்படச் செய்தார். இளைஞர்களைக் கெடுக்கிறார், வானத்தையும் நிலத்தையும் பற்றி ஆராய்கிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டது. சாக்ரடீஸ் தனது செயலுக்கு மன்னிப்பு கோராமல் ஒரு கோப்பை விஷத்தை சிரித்த முகத்துடன் குடித்து உயிர் துறந்தார்.

### 2 பிளாட்டோ



**அமைதியும், மகிழ்ச்சியும்
இருக்கும்வரை உங்களுக்கு
என்றைக்கும் விடிவு காலம்தான்.**


பிளாட்டோ பெரும் செல்வாக்குள்ள, புகழ்பெற்ற கிரேக்க தத்துவ ஞானி. இவர் சாக்ரடீஸின் மாணவர். அரிஸ்டாட்டிலின் குரு. இவர் கணிதம், தர்க்கம், தத்துவம் சார்ந்த துறைகளில் சிறந்தவராக விளங்கினார். மேற்கு உலகின் முதல் கல்விக்கூடமான ஏதென்ஸ் நகரில் அகாடமியை நிறுவினார். இவர் 36 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் அரசியல் மற்றும் அறிவியல் சார்ந்தது. இவர் எழுதிய குடியரசு என்ற நூல் பல நூற்றாண்டுகளாக படிக்கப்பட்டு வருகிறது.

மக்களை ஆளும் அரசாங்கம் நேர்மை தவறாதிருக்க வேண்டும். அரசாங்கத்தில் மக்களின் சார்பாக பொறுப்பில் இருப்பவர்களுக்கு கடுமையான சட்ட திட்டங்கள் இருக்க வேண்டும். அவர்களுக்கென்று சொத்துக்கள் வைத்துக் கொள்ளும் உரிமை இருக்கக்கூடாது. சம்பளமும் கிடையாது. பொது உணவு நிலையங்களில் உணவும், அவர்களுக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க கட்டிடத்தில் தங்கவும், தூங்கவும் அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களிடம் சுயநலம் இருக்காது. லஞ்சங்களுக்கு விலை போகமாட்டார்கள். சமூகத்தில் நேர்மை என்ற குறிக்கோளுடனே செயல்பட வேண்டும். இவ்வாறு தனது குடியரசு புத்தகத்தில் அவர் எழுதியுள்ளார்.



பிறப்பு இறப்பு மட்டுமே நம்மைத் தேடி வரும். மற்றவற்றை நாம்தான் தேடிச் செல்ல வேண்டும்

## 3 அரிஸ்டாட்டில்



**நம்முடைய நற்பண்புகளுக்கும், நம்முடைய அறிவாற்றலுக்கும் ஏற்றபடிதான் நாம் அடையும் மகிழ்ச்சி இருக்கும்.**

அரிஸ்டாட்டில் கி.மு. 384-ல் பிறந்தார். இவர் பண்டைய உலகின் தத்துவ ஞானி. விஞ்ஞானி மற்றும் பல்துறை வல்லுநர் ஆவார். இவர் 170 புத்தகங்களுக்கு மேல் எழுதிக் குவித்த ஒரு சிறந்த எழுத்தாளர். அரிஸ்டாட்டில் என்றால் சிறந்த நோக்கம் என்று பொருள். அவருடைய நூல்கள் அவர் காலத்தில் அறிவியல் செய்திகள் அடங்கிய கலைக் களஞ்சியமாகத் திகழ்ந்தன. வானிவியல், விலங்கியல், கருவியல், புவியியல், இயற்பியல், உடலியல் ஆகியவைக் குறித்தும், பண்டைய கிரேக்கர்கள் அறிந்திருந்த அறிவுத் துறைகள் அனைத்தையும் பற்றி இவர் எழுதியிருந்தார். அத்துடன் கவிதை, நாடகம், இசை, தர்க்கம், சொல்லாட்சி, மொழியியல், அரசியல், ஒழுக்கவியல் ஆகியவையும் இவரின் எழுத்துக்களில் இடம் பெற்றிருந்தன.

பூமி உருண்டை வடிவமானது என்பதை தனது ஆய்வின் மூலம் கூறியவர் அரிஸ்டாட்டில். விலங்கியல் அறிவியலைப் பொறுத்தவரை துல்லியமாக இருப்பதை 19-ம் நூற்றாண்டில் சில அறிவியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் நவீன முறைப்படி 19-ம் நூற்றாண்டில் இணைக்கப்பட்டன. மாவீரன் அலெக்சாண்டர் இவரின் மாணவராவார்.

## 4 மேரி டயர்



**My life not abaileth me in comparison to the liberty of the truth.**

கடவுள் மனிதனிடம் நேரடியாகப் பேசுகிறார். மதக்குருக்கள் தேவை இல்லை என்ற கூற்றை ஆதரித்து அதற்காகப் பல போராட்டங்களை நடத்திய பெண் மேரி பாரட் டயர் ஆவார். இவர் ஓர் ஆங்கில சீர்திருத்த திருச்சபைவாதியாகவும், மதச் சுதந்திர போராளியாகவும் விளங்கினார். இவர் 1611-ம் ஆண்டு அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் பகுதியில் உள்ள பாஸ்டன் நகரில் பிறந்தார். இவர் வில்லியம் டயர் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இறைவனிடம் தொடர்பு கொள்ள பைபிள் படித்தால் போதும். இதற்கு இடைத்தரகர் போல பாதிரியார்கள் தேவையில்லை என்று வலியுறுத்தி வந்தார். இவருக்கு ஊனமுற்ற குழந்தை இறந்து பிறந்தது. அதனைத் தானே தனிப்பட்ட முறையில் புதைத்தார். இது திருச்சபைக்கு எதிரானது எனக்கூறி காலனி ஆட்சிப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இவர் இருமுறை நாடு கடத்தப்பட்டார். மாசாசூசெட்ஸ் திரும்பி வந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார். கைது செய்யப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மன்னிப்பு கேட்டால் விடுதலை செய்வதாகக் கூறியும், மன்னிப்பு கேட்க மறுத்து விட்டார். 1660-ம் ஆண்டு ஜூன் 1 அன்று பொதுமக்கள் முன்னிலையில் பாஸ்டன் பொதுப்பூங்காவில் மேரி டயர் தூக்கிலிடப்பட்டார். பால்டன் தியாகிகள் எனக் குறிப்பிடப்படும் தூக்கிலிடப்பட்ட நால்வரில் ஒருவர் மேரி டயர் ஆவார்.

## 5 வால்டேர்




**ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் அதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.**

உலக வரலாற்றில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியை மக்கள் யாரும் மறந்துவிட முடியாது. அது நிலப் பிரபுத்துவத்திற்கு முடிவு கட்டியது. இதனால் உலிகல் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. சுதந்திரம்! சமத்துவம்! சகோதரத்துவம்! என்ற புதிய மார்க்கம் புரட்சி முழக்கமாக ஒலித்தது. இந்த பிரெஞ்சுப் புரட்சிக்கு தூண்டுகோலாக எழுதிய மிகப்பெரிய சமூக எழுத்தாளர் வால்டேர் ஆவார். இவர் பழமையை உடைத்தார். இவர் வாழ்ந்த 18-ம் நூற்றாண்டை வால்டேரின் யுகம் என்று வரலாறு கூறுகிறது. இவர் பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் 1694ஆம் ஆண்டு நவம்பர் 21 அன்று பிறந்தார். இவரின் பெயர் பிரான்சுவா-மாரீ அரூவே என்பதாகும். இவரின் புனைப்பெயர்தான் வால்டேர். இவர் நாடகம், கவிதை, புதினம், கட்டுரை, வரலாறு, அறிவியல் எனப் பலதுறைகளில் எழுதினார்.

கடுமையான விதிகளும், தண்டனைகளும் விதிக்கப்பட்ட போதும் வெளிப்படையாகப் பேசும் சீர்திருத்தவாதியாக இருந்தார். பிரான்சு மக்களுக்கு கல்வி புகட்டுவதற்காக 24 தொகுதிகள் கொண்ட நூல்களை எழுதினார். மத குருமார்கள் மற்றும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும் விமர்சனம் செய்து வந்தார். அவர் 1778-ம் ஆண்டு மே 30-ல் இயற்கை எய்தினார். சீன நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டார். 13 ஆண்டுகளுக்குப் பிறகு கல்லறைத் திறக்கப்பட்டு அவரது எலும்புகள் அடங்கிய பெட்டி பாரீஸில் புதைக்கப்பட்டது. இந்த இடத்தில்தான் சர்வாதிகாரம் உங்களை சங்கிலியால் பிணைத்தது. இன்று அதே இடத்தில் மக்கள் உங்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறார்கள் என்ற வரிகள் பொறிக்கப் பட்டிருந்தன.

## 6 ரூசோ



**மனிதன் சுதந்திரமாகத்தான் பிறக்கிறான், ஆனால் எங்கும் அடிமைச்சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்.**

பிரெஞ்சுப் புரட்சி, பழமைவாதம் மற்றும் சமூகவுடைமைக் கோட்பாடுகளிலும் செல்வாக்கு படைத்த அரசியல்

தத்துவத்தை உருவாக்கியவர் ஜீன் ஜாக்குஸ் ரூசோ ஆவார். இவர் 1712-ம் ஆண்டு ஜூன் 12 அன்று இன்றைய சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் பிறந்தார். சிறு வயதிலேயே மிகவும் துன்பத்தை அனுபவித்தார். இருப்பினும் பல நூல்களை விரும்பிப் படித்தார். பின்னர் பல நூல்களையும். புதினங்களையும் எழுதினார். இவரது புதிய ஏலவீஸ் என்னும் புதினம் 18-ம் நூற்றாண்டில் அதிகம் விற்பனையானது. இவர் 18-ம் நூற்றாண்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கினார். இவர் இசையில் ஆர்வம் கொண்டவர். பெண்களுக்கு இசைக் கற்றுக் கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டார்.

புதிய கல்வி அறிவியல் முறையில் வழங்கப்பட வேண்டும். அத்துடன் குழந்தைகளுக்கு கல்வியில் முழு சுதந்திரத்தை வழங்க வேண்டும் என்றார். அத்துடன் சுற்றுச்சூழல் கல்வியும் தேவை என்றார். பிரபுக்கள், மன்னர்கள், சமய குருமார்களின் ஆடம்பர வாழ்க்கையை எதிர்த்து எழுதி வந்தார். அதனால் பாரிஸ் நீதிமன்றமும், திருச்சபையும் இவரை எதிர்த்தன. அரசன் என்பவன் மக்களின் நலனுக்காக மக்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பயனால் உருவானவன். மக்களின் உரிமைகளைக் காப்பாற்றும் வரைதான் மன்னன். அவ்விதிகளை மீறும்போது மக்களும் தம்மை கட்டுப்படுத்தும் ஒப்பந்த விதிமுறைகளை மீறலாம் என தனது சமுதாய ஒப்பந்தம் என்னும் தத்துவ நூலில் எழுதியுள்ளார். இவர் 1778-ம் ஆண்டு ஜூலை 2-ல் காலமானார்.

## 7 ஒலிம்பி டி காக்ஸ்




**Male and Female citizens, being equal in the eyes of the law.**

பிரெஞ்சு புரட்சி நடைபெற்ற காலக்கட்டத்தில் பெண்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர். துணிச்சலான கருத்துக்களை வெளியிட்டார். புரட்சி ஏற்பட்ட காலத்தில் துணிச்சலாகவும், தைரியமாகவும், புரட்சிகரமாகவும் எழுதிய பெண் எழுத்தாளர் ஒலிம்பி டி காக்ஸ் ஆவார். இவர் ஒரு பிரெஞ்சு எழுத்தாளர், நாடகாசிரியர், அரசியல்வாதி மற்றும் பெண்ணியவாதிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தவர். இவர் 1745-ம் ஆண்டு மே மாதம் 7 அன்று பிரெஞ்சு நாட்டில் மாண்டாபன் என்னும் ஊரில் பிறந்தார். வசதி படைத்த இவரைவிட வயதில் மூத்த லூயிஸ் ஆப்பிரி என்பவருக்கு திருமணம் செய்து வைத்தனர். அவர் இறந்ததால் இளம் வயதிலேயே விதவையானார்.

பிரெஞ்சு புரட்சியானது 1789 முதல் 1799-ம் ஆண்டு வரை நடந்தது. இவருக்கு புரட்சியாளர்களுடன் தொடர்பு கிடைத்தது. புரட்சியின் பலனாக ஆண்களுக்கான உரிமைகள் கிடைத்தன. பெண்களுக்கும் ஆண்களைப் போல சம உரிமைகள் வழங்க வேண்டும், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்க வேண்டும் என காக்ஸ் பெண்களைத் திரட்டிப் போராடினார். இவர் ஆண், பெண் பாலின பாகுபாடுகளைப் பற்றி எழுதினார். தீவிரமாக, புரட்சிகரமாக எழுதிய காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டார். 1793-ம் ஆண்டு நவம்பர் 2 அன்று இவரின் தலை துண்டிக்கப்பட்டது. இன்றைக்கும் பெண்ணிய வாதிகளில் முன்னோடியாக கருதப்படுகிறார்.

## 8 ஆபிரகாம் லிங்கன்



**எல்லோரையும் நம்புவது பயங்கரமானது. ஆனால், யாரையுமே நம்பாமல் இருப்பது மிகவும் பயங்கரமானது**

அமெரிக்காவில் கெண்டக்கி என்னும் ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் ஆப்ரகாம் லிங்கன் 1809-ம் ஆண்டு பிப்ரவரி 12 அன்று பிறந்தார். அவர் தந்தை ஒரு தச்சர். லிங்கன் பள்ளிக்கு தினமும் காடுகளுக்கிடையில் 9 மைல் தூரம் நடந்து சென்றார். புத்தகங்கள் விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியவில்லை. ஆகவே இரவல் வாங்கிப் படித்தார். ஒரு சமயம் இரவல் வாங்கிய புத்தகம் மழையில் நனைந்து கிழிந்து விட்டது. புது புத்தகத்தை வாங்கிக் கொடுக்க பணம் இல்லாத காரணத்தால் உரிமையாளரின் நிலத்தில் 3 நாட்கள் விவசாயம் செய்தார். ஏழ்மையின் காரணமாக பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தினார். தாமாகவே படித்து வழக்கறிஞர் ஆனார்.

ஆபிரகாம் லிங்கனுக்கு குடிப்பழக்கம் மற்றும் புகைக்கும் பழக்கம் கிடையாது. இவர் அரசியலில் ஈடுபட்டார். 1860-ம் ஆண்டில் அமெரிக்காவின் 16-வது அதிபராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அமெரிக்காவில் கறுப்பினர்த்தவர்களை அடிமைகள் என்ற பெயரில் விற்பது, இரும்புக் கம்பியால் கட்டுவது, சாட்டையால் அடிப்பது போன்ற கொடுமைகள் இருந்தன. லிங்கன் 1862-ம் ஆண்டில் அடிமைத்தனத்தை ஒழித்தார். இதனால் உலகத் தலைவராக பிரபலம் அடைந்தார். மக்களால் மக்களுக்காக நடத்தப்படுவது மக்களாட்சி எனக் கூறிவந்தார். ஜான் வில்ஸ் பூத் என்பவன் துப்பாக்கியால் சுட்டதால் 1865-ம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று மரணமடைந்தார்.

## 9 சூசன் பி அந்தோணி




**Women must not depend upon the protection of man, but must be taught to protect herself.**

எந்த உரிமையும் பெண்களுக்கு எளிதில் கிடைத்ததில்லை. ஆண்களுக்கு ஓட்டுரிமை இருப்பதுபோல் தங்களுக்கும் ஓட்டுரிமை வழங்க வேண்டும் எனப் போராடியப் பெண்களில் முக்கியமானவர் சூசன் பி அந்தோணி ஆவார். இவர் 1820-ம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று அமெரிக்காவில் ஆடம்ஸ் நகரில் பிறந்தார். இவரது குடும்பம் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டு வந்தது. அடிமை முறை ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபாடு காட்டி வந்தார். லிங்கன் நிர்வாகத்திற்கு ஆதரவாக பெண்கள் ஆதரவு சங்கத்தை சூசன் உருவாக்கி செயல்பட்டு

வந்தார். மது ஒழிப்புக் கூட்டத்தில் இவருக்கு பேச அனுமதி மறுக்கப்பட்டது. பெண்களுக்கு ஒட்டு அளிக்கும் உரிமை இல்லாததாலேயே அவரைப் பேச அனுமதிக்கவில்லை.

பெண்கள் உரிமைக்கான பேரவை என்ற அமைப்பை உருவாக்கிப் போராடினார். இதேபோல் தேசியப் பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தை 1864-ல் உருவாக்கக் காரணமாக இருந்தார். பெண்கள் உரிமைகளை வலியுறுத்தி புரட்சி என்ற வார இதழை எலிசபெத் காடி ஸ்டாண்டன் என்பவருடன் இணைந்து நடத்தினார். இவர் உலகம் முழுவதும் சென்று பெண்கள் வாக்குரிமை பிரச்சாரம் செய்தார். 1872-ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் சட்டத்தை மீறி வாக்களித்தார். இதனால் கைது செய்யப்பட்டார். மேலும் பல தடைகளை மீறி ஒரே ஆண்டில் 20000 கிலோ மீட்டர் பயணம் செய்து 170 இடங்களில் சொற்பொழிவு ஆற்றினார். இவர் 1906-ல் காலமானார். இவர் இறந்து 14 ஆண்டுகள் கழித்து பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்தது.

## 10 காரல் மார்க்ஸ்



**ஒரு மனிதன் தனக்காக மட்டும் உழைத்தால், ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானியாகவோ, ஞானியாகவோ, தலைசிறந்த கவிஞனாகவோ ஆகக் கூடும். ஆனால் அவனால் என்றுமே உண்மையில் நிறைவான, மகத்தான மனிதனாக ஆக முடியாது.**

உலகத் தலைவர்களின் வரிசையில் முன்னிலையில் இருப்பவர் காரல் மார்க்ஸ் ஆவார். இவர் 1818-ம் ஆண்டு மே 5 அன்று ஜெர்மனியில் பிறந்தார். அறிவியல் சார்ந்த பொதுவுடமைக் கொள்கையை வகுத்தார். அரசியல் பொருளாதார வரலாற்றில் வல்லுநர். தலைசிறந்த அறிஞர். எழுத்தாளர், சிந்தனையாளர் மற்றும் புரட்சியாளராக உலகம் முழுவதும் அறியப்படுகிறார். இவருடைய தத்துவங்களும் சிந்தனைகளும் மார்க்ஸிசம் என்று அழைக்கப்படுகிறது. இக்கொள்கை உலகை முழுவதும் தொழிலாளி வர்க்கத்தினரால் பின்பற்றப்படுகிறது. இவரும், ஏங்கெல்சும் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை 1848-ம் ஆண்டு லண்டனில் வெளியிட்டனர்.

கார்ல் மார்க்ஸ் 1867-ம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று மூலதனம் என்ற நூலை வெளியிட்டார். புத்தகம் வெளிவந்த முதல் நாளே உலகம் முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்றது. உலகின் தலைச்சிறந்த நூலாக மூலதனம் கருதப்படுகிறது. மூலதனம் என்ற நூலின் மூலம் உலகிற்கே பொருளாதாரப் பாதையை மார்க்ஸ் ஏற்படுத்திக் கொடுத்தார். உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம். ஊதியம் உழைத்தவனைச் சென்று சேர வேண்டும் என்று மூலதனம் என்னும் புத்தகத்தில் மார்க்ஸ் எழுதியிருந்தார். இது தொழிலாளர்களின் வாழ்வில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. மார்க்ஸ் என்னும் மாமனிதர் 1883-ம் ஆண்டு மார்ச் 14-ல் இயற்கை எய்தினார்.

## 11 காரல் மார்க்ஸ்




**முதலாளித்துவ சமூகத்தில் சிந்தனைகளும் செயல்பாடுகளும் பொருளாதார நலன் குறித்தே சுற்றி வருகின்றன.**

பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் என்பவர் கார்ல் மார்க்ஸின் அருமையான நண்பர். இவர் இல்லை என்றால் மார்க்ஸின் உழைப்பு உலகுக்கு முழுமையாகச் சென்று சேர்ந்திருக்காது. ஏங்கெல்ஸ் மிகப் பெரிய அறிஞர், தத்துவஞானி, எல்லாவற்றையும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர். தன் தனிப்பட்ட வாழ்க்கையில் மிகக் கட்டுப்பாடான ஒழுங்க நிறைந்தவர். ஏங்கெல்ஸ் 1820ஆம் ஆண்டு நவம்பர் 28 அன்று புரூசியாவிலுள்ள பர்மன் என்னுமிடத்தில் பிறந்தார். சிறுவனாக இருக்கும்பொழுதே மதங்களின் மீதும், முதலாளித்துவத்தின் மீதும் வெறுப்பு கொண்டிருந்தார். கார்ல் மார்க்ஸ் உடன் இணைந்து கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதினார்.

தன்னை முன்னிலைப் படுத்தாமல் மார்க்ஸை முன்னிலைப் படுத்தினார். கார்ல் மார்க்ஸ் மூலதனம் என்னும் நூலை வெளியிட உதவினார். மார்க்ஸ் இறந்த பிறகு மூலதனத்தின் 2 ஆம், 3ஆம் பாகங்கள் வெளிவர முழு பங்க வகித்தவர் ஏங்கெல்ஸ். பாட்டாளிகள் இழப்பதற்கு அவர்களின் அடிமைத்தனங்களைத் தவிர ஏதுமில்லை. ஆனால் பாட்டாளிகள் பெறுவதற்கோ ஓர் பொன்னுலகம் இருக்கிறது. ஆகவே உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என மார்க்ஸ் உடன் இணைந்து குரல் கொடுத்தார். தன் சொத்தை மார்க்ஸின் குழந்தைக்கு எழுதி வைத்தார். இவர் 1895ஆம் அண்டு ஆகஸ்ட் 5இல் இயற்கை எய்தினார்.

## 12 அகஸ்டஸ் ஸ்பைஸ்




**இன்று நீங்கள் நெரிக்கின்ற எங்களது குரலைவிட, எமது மவுனம் ஆற்றல்மிக்க சக்தியாக வெளிப்படும் காலம் வரும்.**

எட்டு மணி நேரம் கேட்டு போராடி தொழிலாளர் வர்க்கத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தவர் அகஸ்டஸ் ஸ்பைஸ் ஆவார். இவர் தீவிர தொழிலாளர் ஆதரவாளர். தொழிற்சங்கத் தலைவர் மற்றும் பத்திரிக்கை ஆசிரியர். இவர் மத்திய ஜெர்மனியில் உள்ள ஹெஸ்ஸா மாழலத்தில் 1855ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பிறந்தார். இவரது தந்தை அரசின் வனத்துறை அதிகாரியாகப் பணிபுரிந்தார். அவர் இறந்த பிறக இவர் அமெரிக்காவின் சிகாகோ நகரில் குடியேறினார். தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார். 1877ஆம் ஆண்டில் சோசலிச தொழிலாளர் கமிட்டியில் சேர்ந்தார். சர்வதேச தொழிலாளர்

சங்கத்தில் இணைந்து தொழிலாளர்களுக்காகப் போராடினார்.

எட்டு மணி நேர வேலை நேரம் கேட்டு தொழிலாளர்களின் போராட்டங்கள் பேரணிகள் நடந்தன. தொழிலாளர்கள் ஒன்று சேராமல் தங்களால் வெற்றி பெற முடியாது என பொதுக் கூட்டங்களில் பேசினார். 8 மணி வேலை நேரம். பேச்சு சுதந்திரம், தொழிலாளர் அமைப்பாக திரட்டுவதற்கான சுதந்திரம் வேண்டி ஹேமார்க்கெட் சதுக்கத்தில் 1886ஆம் அண்டு மே 4இல் தொழிலாளர் போராட்டம் நடைபெற்றது. அப்போது அடையாளம் தெரியாத ஒருவரால் வீசப்பட்ட குண்ட வெடித்து 7 போலிஸ், 4 பொது மக்கள் இறந்தனர். இதனை ஹேமார்க்கெட் படுகொலை என்றனர். இக்கொலைக்கு சதித் திட்டம் தீட்டினார் என அகஸ்டஸ் ஸ்பைஸ் கைது செய்யப் பட்டார். பின்னர் 1887ஆம் ஆண்டு நவம்பர் 11இல் தூக்கிலிடப்பட்டார். இது உலகத் தொழிலாளர்கள் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

## 13 லெனின்



**தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.**

உலகத் தலைவர்களில் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர் லெனின் ஆவார். இவர் 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று ரஷ்யாவின் வால்கா நதிக்கரை ஓரம் உள்ள சி பிர்ஸக் என்னும் நகரத்தில் பிறந்தார். இவரின் பெயர் விளாடிமிர் இலீச் உல்யானவ். லெனின் என்பது ரஷ்யப் புரட்சிக்காக அவர் கொண்டிருந்த புனைப்பெயர். பின்னர் விளாடிமிர் லெனின் எனத் தனது பெயரை மாற்றிக் கொண்டார். கார்ல் மார்க்ஸின் மூலதனம் என்னும் புத்தகத்தைப் படித்த பிறகு தொழிலாளர்களுக்காகப் பாடுபட வேண்டும் என முடிவு செய்தார்.

ரஷ்யப் புரட்சிக்கு தலைமை தாங்கி கம்யூனிஸ்ட் ஆட்சியை 1917ஆம் ஆண்டில் கொண்டு வந்தார். கார்ல் மார்க்ஸின் சித்தாந்தத்தை வரலாற்றில் முதன்முதலில் செயல்படுத்தினார். சோவியத் ரஷ்யாவின் முதல் அதிபராக லெனின் பதவி வகித்தார். ஆட்சி அமைத்த மறுநாளே நில பிரபுக்களின் விளைநிலங்களைக் கைப்பற்றி விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தார். ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி வந்த பிறகு உலகம் முழுவதும் கம்யூனிசம் பரவியது. லெனின் நிறைய படித்தார். புரட்சிகரமான கருத்துக்களை புத்தகமாக எழுதினார். அவை 55 தொகுதிகளாக வெளிவந்தன. இவர் 1924ஆம் ஆண்டு ஜனவரி 21 அன்று காலமானார். அவரது பதப்படுத்தப்பட்ட உடல் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

*தலைவர்கள் வருவார்கள்...*

## கனவு இதழின் சொந்தக்காரர்கள் இவர்கள்

**DREAM Quarterly Magazine - PATRONS 2019**

| Sl. No. | Name | Place |
|---|---|---|
| 01 | Mr. Antony Balmin Jose | Nagercoil, KK Dist |
| 02 | Mr. Arun Prasath C | Trichy |
| 03 | Mr. Britto J | Sagayanagar, KK Dist |
| 04 | Ms. Chandra, CIRHEP | Nilakottai, Dindigul Dist |
| 05 | Mr. Durai Raj | Thandalaiputhur, Musiri |
| 06.1 | Ms. Mary Selvi. M | Palliyadi, KK Dist |
| 06.2 | Ms. Mary Matilda. T | Kuruvilai, KK Dist |
| 07.1 | Ms. Darlin Mary. G | Thekkottu Vilai, KK Dt |
| 07.2 | Ms. Sheeba. Y | Vagavilai, KK Dist |
| 08 | Ms. Hilda J | Mullanginavilai, KK Dist |
| 09 | Ms. Jeeva S | Thirutharavilai, KK Dist |
| 10 | Ms. Mary Maxima. R | Palliyadi, KK Dist |
| 11 | Ms. Helen. S | Kuttapanai Vilai, KK Dist |
| 12 | Ms. Melina Rose | Elavuvilai, KK Dist |
| 13 | Mr. Winlet Moni. D | Maravankudieruppu, KK Dist |
| 14 | Mr. Knox. J.r. | Nagercoil, KK Dist |
| 15 | Mr. Louis Sahayam | Maravankudieruppu, KK Dist |
| 16 | Ms. Mary Rose | Trichy |
| 17 | Mr. Murali. K | Chennai |
| 18 | Mr. Berlin Raj. G | Palliady, KKDist |
| 19 | Mr. Oswald Quintal | Trichy |
| 20 | Dr. Paul. C.J | Kerala |
| 21 | Mr. Prakash JK | Kurusadi, KK Dist |
| 22 | Mr. Rithish Raj V | Thiruvanaikaval, Trichy |
| 23 | Fr. Jose Robinson. J | Mulagumoodu, KK Dist |
| 24 | Mr. Samuel Christdoss | Trichy |
| 25 | Ms. Shekina Evelin C | Cuddalore |
| 26 | Mr. Thomas Xavier J.R | Maravankudieruppu, KK Dist |
| 27 | Mr. Vidya Sagar. J | Thiruvannamalai |

சந்தா, விளம்பரம், படைப்புகள் மற்றும் வாசகர்களின் கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்

**முறையாக கற்காத கல்வி, சரியாக பயன் படுத்தாத பணம் கெட்டு போகும்.**

-சாணக்கியர்



# விண்வெளி செல்லும் கிராமத்து மாணவி

நன்றி: **என். கணேஷ்ராஜ்,** இந்து தமிழ்திசை

சிலரின் லட்சியங்கள் உயர்வாக இருக்கும். ஆனால் உதய கீர்த்திகாவின் லட்சியமே உயரே செல்வதுதான். விண்வெளி வீராங்கனையாக வேண்டும் என்பதே இவரது இலக்கு. ஆனால் கிராமத்து வளர்ப்பு, வீழ்ந்தே கிடக்கும் குடும்ப பொருளாதாரம், வழிகாட்டல் இல்லாத தடுமாற்றம் என்று அணிவகுத்து நின்ற தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து முன்னேறிய படி இருக்கிறார் உதயகீர்த்திகா. விண்வெளி செல்வதற்கான பயிற்சியைப் பெற போலந்தில் உள்ள பயிற்சி மையத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



சர்வதேச அளவில் தேர்வு செய்யப்பட்டுள்ள 20 பேரில் இந்தியா சார்பில் செல்லக் கூடிய ஒரே நபர் இவர் என்பதே உதயகீர்த்திகாவின் பெருமைக்குச் சான்று. இந்திய விஞ்ஞான உலகத்தின் பார்வையைத் தனது சொந்த ஊரான தேனி அல்லிநகரத்தின் பக்கம் திருப்பியிருக்கிறார் இவர்.

தாமோதரன் - அமுதா தம்பதியின் மகளான உதயகீர்த்திகாவுக்கு சிறு வயதிலேயே நிலாவையும் விண்வெளியையும் பிடிக்கும். விண்வெளிக்கு செல்ல வேண்டும் என்றுகூட அடம்பிடித்திருக்கிறார். வளர வளர அது மறையத் தொடங்கியது. தேனி பிரசன்டேஷன் கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் வழியில் படித்தபோது உள்ளுக்குள் பொதிந்து கிடந்த அறிவியல் ஆர்வம் மெல்ல எட்டிப் பார்த்தது. பத்தாவது படித்தபோது சுற்றுச் சூழல் பாதுகாப்பில் விண்வெளியின் பங்கு என்ற தலைப்பில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இ.எஸ்.ஆர்.ஓ) ஒரு கட்டுரைப் போட்டி நடத்தியது. அதில் உதயகீர்த்திகா மாநில அளவில் முதலிடம் பெற்றார். இதற்காக இஸ்ரோவுக்குக் குடும்பத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

அதுவரை படமாகவும் தொலைக்காட்சியிலும் பார்த்த செயற்கைக்கோள் பாகங்களை நேரில் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. அங்கே சென்றது என் வாழ்க்கையின் முக்கியமான தருணம். அப்போதுதான் விண்வெளி வீராங்கனை கனவு ஆழமாக வேரூன்றியது என்கிறார் உதயகீர்த்திகா.

பன்னிரண்டாம் வகுப்பிலும் கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பட்டது. அதில் வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது. கணினி பயன்படுத்துவதற்கான சூழல் இல்லாத நிலையில் புத்தகங்களின் பக்கம் அவரது பார்வை திரும்பியது. விண்வெளி தொடர்பான புத்தகங்களைத் தேடிப் பிடித்து படிக்கத் தொடங்கினார்.

சில புத்தகங்களை வாங்குகிற அளவுக்கு எங்ககிட்ட வசதியில்லை. மதுரையில் குறைவான சம்பளத்தில் வேலை செய்துகிட்டு இருந்த எங்க அப்பா நிறைய நாள் காலையில் சாப்பிடாமல், அந்தப் பணத்துல தான் அந்தப் புத்தகங்களை வாங்கித் தந்தார் என்று சொல்லும்போது உதயகீர்த்திகாவின் குரல் கம்முகிறது. அதனாலேயே எப்படியும் போட்டியில் வென்றுவிட வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தார்.

அந்த உறுதி அவருக்கு மாநில அளவில் முதலிடத்தைப் பெற்றுத் தந்தது. இஸ்ரோவுக்கு சென்றார். அங்கே சந்தித்த விஞ்ஞானிகள் பலர் உதயகீர்த்திகாவின் இரண்டாம் சாதனையைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். ஜிஎஸ்எல்வி.எம்கே.3 விண்கல மாடலில் பரிசும் சான்றிதழும் வழங்கினார்கள். மேலும், இவரின் அறிவியல் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு வழிகாட்டினார்கள்.

## புதிய பயணம்

ஆனால், அந்தத் துறைக்குள் நுழைவது அவ்வளவு எளிதாக இல்லை. தமிழ் வழிக் கல்வி, கிராமத்துப் பின்னணி, பொருளாதாரம் என்று பலவும் இவரை அச்சுறுத்தின. உயர் தொழில்நுட்பப் படிப்புக்குப் பெருநகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை என்பதுடன் சிபிஎஸ்இ படிப்பு அடிப்படைத் தகுதி என்பதும் இவரது மனத்தை சஞ்சலப்படுத்தின.

இருப்பினும் உக்ரைனில் உள்ள கார்கிவ் நேஷனல் ஏர்போர்ஸ் யுனிவர்சிட்டியில் ஸ்பெஷலிஸ்ட் டெக்னீசியன் ஆஃப் ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ் படிப்புக்கு

விண்ணப்பித்தார். இடமும் கிடைத்தது. கல்வி பயில பல இடங்களில் நிதியுதவி கேட்டுப் போராடினார்கள். ஊடகங்கள், சமூக வலைதளங்கள் ஆகியவற்றின் மூலம் இவரின் நிலை அறிந்து நிதியுதவி கிடைக்கத் தொடங்கியது. ரூ. 500 முதல் பல ஆயிரம் வரை கிடைத்ததை எல்லாம் ஒன்று சேர்த்து உக்ரைனுக்கு சென்றார்.



கோயம்புத்தூரில் இருந்து முதல் வான்வெளிப் பயணம் தொடங்கியது. முதன்முதலாக விமானத்தில் ஏறியது சிலிர்ப்பா இருந்தது. விமானம் மேலே உயர்ந்தபோது லேசாகப் பதற்றப்பட்டேன். ஆனால், விண்வெளி வீராங்கனை விமானப் பயணத்துக்கெல்லாம் பதற்றப்படக் கூடாதுன்னு தோணுச்சு. ராக்கெட்டில் செல்ல வேண்டியவள் நான். இதைவிட பல மடங்கு வேகம். செங்குத்தான பயணம் என்று அதைக் கற்பனை செய்து பார்த்தேன். இயல்புக்கு வந்தேன்.

உக்ரைனில் ஆங்கிலத்தை மிக மிகக் குறைவாகவே பேசுகிறார்கள். ரஷ்ய மொழிதான் அதிகம். ஆரம்பத்தில் சைகை காட்டிப் பேசி சமாளித்தேன். பிறகு தொடர்பு கொள்ளும் அளவுக்கு ரஷ்ய மொழியைக் கற்றுக் கொண்டேன். மொழி மட்டுமல்ல, உணவு, கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்துமே புதிதாக இருந்தன. அங்குள்ளவர்கள் அதிகம் இனிப்பு நிறைந்த உணவு வகைகளைத்தான் உண்கின்றனர்.

காரத்தை அவ்வளவாகச் சேர்த்துக் கொள்வதில்லை. அதனால் வருஷத்துக்கு ஒருமுறை வீட்டுக்கு வரும்போது பொடி வகைகளை இங்கிருந்து எடுத்துட்டுப் போவேன். சொந்தச் சமையல்தான். அங்கே ஒரு தேங்காய் 300 ரூபாய். புளி கிடைக்கவே கிடைக்காது.

உக்ரைனில் வாழ்ந்துவிட்டால் உலகில் எங்கு வேண்டுமனாலும் வாழ்ந்து விடலாம். அந்த அளவுக்கு மோசமான பருவநிலை. மைனஸ் 29 டிகிரிக்குப் பனி இருக்கும். அது ஆறு மாதம் நீடிக்கும். அதேபோல் வெயிலின் தாக்கமும் அதிகம் என்று சொல்லும் உதயகீர்த்திகா, படிப்பை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்ததால் ஊர் சுற்றுவதில் ஆர்வம் இருந்ததில்லை என்கிறார்.

## கடுமையான பயிற்சி

நீச்சல் பயிற்சி, உடற்பயிற்சி என விண்வெளி செல்வதற்கான உடல்வாகைப் பேண ஆரம்பித்தார். முகம் தெரியாத பலரின் உதவியால் நான்கு ஆண்டு படிப்பை முடித்தார். அதில் 92.5 சதவீன மதிப்பெண் பெற்றார். தற்போது போலந்து நாட்டில் உள்ள அனலாக் விண்வெளி பயிற்சி மையத்தில் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறத் தேர்வு பெற்றுள்ளார். அங்கே உலக அளவில் 15 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர். கடுமையான உடல் திறன் சோதனை, மனவலிமையைச் சோதிக்கும் பயிற்சிகள் போன்றவற்றை முடித்து இதில் தேர்வாகியிருக்கிறார் உதயகீர்த்திகா.

ஜூலை – ஆகஸ்டில் பயிற்சிகள் தொடங்கும். போலந்து மட்டுமல்லாது நெதர்லாந்து, ஜெர்மனி உள்ளிட்ட பல இடங்களில் பயிற்சி அளிக்கப்படும். செவ்வாய் போன்ற கோள்களில் இருப்பதுபோல் புவிஈர்ப்பு விசை இல்லாமல் இருத்தல், 14 நாட்கள் தனிமையில் செயல்திட்டத்தில் ஈடுபடுவது, ராக்கெட் செல்லும் வேகத்துக்கு உடல் அழுத்தத்தைத் தயார் செய்தல். குமிழில் அமர்ந்து அதிவேக சுழற்சியை ஏற்றுக் கொள்ளுதல் போன்ற ராணுவத்தைவிடக் கடுமையான பயிற்சி இதில் இருக்கும்.

ரஷ்யா மூலம் விண்வெளிக்குச் சென்ற விண்வெளி வீரர் ஸ்விஸ்கி தனது பயண அனுபவத்தையும் விண்வெளியில் எப்படி நடந்து கொள்வது குறித்தும் பயிற்சி அளிப்பார். மேலும், ராக்கெட் உருவாக்கம், உலோகங்களின் செயல்பாடு, இயங்கும் விதம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளும் இதில் அளிக்கப்படும் என்று கண்கள் மின்ன சொல்லிக்கொண்டே போகிறார்.

இந்திய விண்வெளி வீரர்கள் ராகேஷ் சர்மா, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட பலரும் நாசாவில் இருந்துதான் விண்வெளிக்குச் சென்றுள்ளனர். தற்போது சுகன்யான் மிஷன் திட்டத்தில் 2021-ல் இஸ்ரோ மூலம் மனிதர்கள் விண்வெளிக்குச் செல்லவிருக்கின்றனர். இதில் இடம்பெற வேண்டும் என்பதே இவரின் லட்சியம். இதற்காகப் பல்வேறு பயிற்சிகளையும் படிப்புகளையும் முடித்துத் தன்னைத்தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தனியாகப் பயணம் செய்யவே தயங்குகிறவர்களுக்கு மத்தியில் பல ஆயிரம் மைல் தனியே சென்று மாறுபட்ட சூழ்நிலையை எதிர்கொண்ட வென்று காட்டியிருக்கும் உதயகீர்த்திகாவின் சாதனை பலரையும் வியக்க வைத்திருக்கிறத. இந்தியாவின் புகழை உலக அரங்கில் உயர்த்திப் பிடிக்க இன்னொரு பெண் சக்தி தயாராகிவிட்டது.

**என்னவாக வேண்டும் என்பதினை**
**காட்சிப்படுத்தும்போது**
**கனவுகள் நிஜமாகின்றன.**



பருவநிலை மாற்றம்:

# •தண்ணீர் பிரச்சனை •இடப்பெயர்வு •வறுமை

## மீண்டும் ஓர் அழுத்தமான எச்சரிக்கை

**மு. நியாஸ் அகமது,** பி.பி.சி. தமிழ்
30 ஜூன் 2019

**பருவநிலை மாற்றம் பணக்காரர்களைவிட ஏழைகளை மிக மோசமாகப் பாதிக்கும். அதே நேரம் ஜனநாயகத்திற்கு, தனிமனித உரிமைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என்கிறது ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய அறிக்கை ஒன்று.**



பருவநிலை மாற்றம் மனித உரிமை, ஏழ்மையில் எத்தகைய தாக்கத்தை உண்டாக்குமென ஓர் அறிக்கையை அண்மையில் ஐ.நா. வெளியிட்டது. இந்த அறிக்கையைத் தயாரித்தவர் ஃபிலிப் ஆல்ஸ்டோன்.

அந்த அறிக்கையில் பல அஞ்சத்தக்க விஷயங்கள் குறிப்பிடப்பட்டள்ளன.

### ஏழ்மையை நோக்கி 12 கோடி மக்கள்:

கடந்த 50 ஆண்டு கால வளர்ச்சி, சுகாதாரத் துறை மற்றும் வறுமை ஒழிப்பில் நாம் அடைந்த முன்னேற்றம் இவை அனைத்துக்கும் அச்சுறுத்தலாக பருவநிலை மாற்றம் உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், 2030-ம் ஆண்டுக்குள் 12 கோடி மக்களை இந்த பருவநிலை மாற்றம் வறுமையில் தள்ளும். குறிப்பாக வறுமையில் உழலும் நாடுகளில் இந்த பருவநிலை மாற்றமானது மோசமான ஆதிக்கம் செலுத்தும் என்கிறார் இந்த அறிக்கையைத் தயாரித்த ஃபிலிப்.

ஏற்கனவே பருவநிலை மாற்றம் குறித்து நாம் வைத்திருக்கும் இலக்கை அடைந்தாலும், ஒரு கோடி மக்கள் வறுமை நிலையை நோக்கி தள்ளப்படுவார்கள். பெரிய அளவில் இடப்பெயர்வு நிகழும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடுகிறார் அவர்.

ஏழ்மையில் இருப்பவர்கள் புவி வெப்பமயமாதலுக்கு பெரிய அளவில் காரணமில்லை என்றாலும், அவர்கள்தான் பருவநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படுவார்கள். வறுமையின் காரணமாக இதிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள முடியாதவர்கள் அவர்கள் என்கிறார் ஃபிலிப்.

இந்த அறிக்கையில் இன ஒதுக்கல் என்ற பதத்தை அவர் பயன்படுத்துகிறார்.

நாம் பருவநிலை இன ஒதுக்கல்-ஐ எதிர்கொள்ளும் சூழலில் இருக்கிறோம். அதிக வெப்பம், பசி இவற்றிலிருந்து எல்லாம் பணக்காரர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வார்கள். ஆனால் அவர்களைத் தவிர்த்து பிறர் அனைவரும் பாதிக்கப்படுவார்கள் என்று அந்த அறிக்கையில் எச்சரிக்கிறார் அவர்.

**பருவநிலை மாற்றம் குறித்து தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்**

### வாழ்வதற்கான உரிமை:

மனித உரிமைக்கும் பருவநிலை மாற்றத்திற்குமான தொடர்பு மிகவும் நெருக்கமானது. ஆனால். அதை பெரிதாக கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் புறம் தள்ளுகிறோம். வாழ்வதற்கான உரிமை, அடிப்படை உரிமைகளாக உணவு, இருப்பிடம், குடிநீர் - இவை அனைத்தும் பெரிய அளவில் பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தின் மீதும் பெரிய அளவில் தாக்கம் செலுத்தி இருப்பதாக கூறுகிறார் ஃபிலிப்.

### தனியார் மயம் தீர்வல்ல:

சிலர் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சமத்துவமின்மை மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உண்மையான தீர்வைத் தேடிக் கொண்டிருக்க, சிலர் இதனையும் பொருளாதார வாய்ப்பாக கருதுகிறார்கள்.





தனியார் மயத்தை தீர்வாக முன் வைக்கிறார்கள். உண்மையில் தனியார்மயம் தீர்வல்ல. இது இன்னும் சிக்கலை அதிகப்படுத்துவே செய்யும் என்கிறார் ஃபிலிப்.

## தமிழகத்தின் நிலை:

தமிழகத்திலும் இப்படியான நிலைதான் நிலவுகிறது. ஆனால். அதை யாரும் உணர்ந்ததாக தெரியவில்லை என்கிறார் சூழலியல் எழுத்தாளர் இரா. முருகவேள்.



பருவநிலை மாற்றம் குறித்து பருவநிலை அகதிகள் எனும் புத்தக்கத்தை எழுதியவர் இரா. முருகவேள்.

அவர், 1980களில் பெரிய அளவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து கோவையை நோக்கி இடப்பெயர்வு நிகழ்ந்தது. ஏதுமற்ற பிச்சைக்காரர்கள் தான் நடைபாதையில் வசிப்பார்கள் என்ற பொதுவான எண்ணம் அப்போதுதான் உடைந்தது. நிலம் வைத்திருந்தவர்கள், வீடு வைத்திருந்தவர்கள் என பலர் விவசாயம் பொய்த்ததால் வாழ்வாதாரத்திற்காக கோவை நடைபாதைகளில் குடியேறினர். கிடைத்த வேலைகளைச் செய்தனர். அடுத்து 90களில் இதுபோல மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வந்தனர். இறுதியாக தஞ்சை பகுதிகளிலிருந்தும் பிழைப்புக்காக பெருநகரங்களில் குடியேறினர். இவர்களை பருவநிலை அகதிகளாக அரசு பார்க்காமல் வெறும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களாக மட்டுமே அரசு பார்த்தது, பார்க்கிறது என்கிறார்.

மேலும் அவர் உள்நாட்டு மீன் உற்பத்தி, அதாவது கிராமத்தில் உள்ள குளங்கள். கண்மாய்கள், நதிகள் இதனை நம்பி மீன் பிடித்தல் தொழில் செய்யும் சில இனக்குழுக்கள் இருந்தன. இவர்களுக்கெல்லாம் என்ன ஆனது? இவர்கள் எல்லாம் எங்கே சென்றார்கள்? பருவநிலை மாற்றத்திற்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பை நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதே இல்லை என்கிறார் முருகவேள்.

பருவநிலை பிரச்சனைகளிலிருந்தும் பணம் ஈட்டவே நிறுவனங்கள் விரும்புகின்றன என்று கூறும் முருகவேள், இப்போது பெரிய அளவில் தண்ணீர் பிரச்சனை நிலவுகிறது. அதற்கு என்ன தீர்வு என்று பார்க்காமல், இதனை பயன்படுத்தி தண்ணீரைத் தனியார்மயமாக்கப் பார்க்கிறார்கள். இது கலகத்திற்குதான் வழிவகுக்கும் என்று தெரிவிக்கிறார்.

## பொருளாதார அமைப்பில் மாற்றம்:

பொருளாதார அமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வருவதும், மிகை உற்பத்தியை குறைப்பதும்தான் உண்மையான தீர்வாக இருக்கும் என்று சொல்லும் முருகவேல், ஏதோரு நாடு கரியமில வாயுவை அதிகம் உமிழ்வதால் மற்றொரு நாடு பாதிக்கப்படுகிறது என்கிறார்.

இதே கருத்தை முன் வைக்கிறார் திஸ் செஞ்சஸ் எவரிதிங் கேபிடலிஸம் ஈறீ தி கிளைமேட் புத்தகத்தினை எழுதிய நையோமி க்ளையன்.

அவர் தனது புத்தகத்தில் நமது பொருளாதார முறையும். நமது புவியும் சண்டையிட்டுக் கொண்டுள்ளன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நமது பொருளாதார முறை நம் வாழ்வில் அதிகத் தாக்கம் செலுத்துகிறது. பொருளாதார முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும், இல்லையென்றால் பருவநிலை மாற்றத்தின் இடர்களை அனுபவிக்கத்தான் வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.



## இளையோர் நாம் என்ன செய்யலாம்?

- மரம் நட்டு நமது கிராமத்தை, பள்ளி வளாகத்தை பசுமையாக்குவோம்.
- வீடுகளில் பழ மரக்கன்றுகளை நடுவோம்.
- தண்ணீரை மிச்சப்படுத்துவோம். மழை நீரை சேகரிப்போம்.
- கழிவு நீரை – காய்கறித் தோட்டத்திற்கு பயன் படுத்துவோம்.
- ஊரில் – பைப் திறந்திருந்து தண்ணீர் வீணாகிக் கொண்டிருந்தால் அடைத்திடுவோம்.
- பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்போம்.

பழமொழி சொல்லும் பாடங்கள்



# சிறு துரும்பும் பல் குத்த உதவும்

■ தே. சைலட் மோணி

கிராமங்களில் கொட்டிக் கிடக்கும் வளங்களில் ஒன்றுதான் பழமொழிகள். பெரியவர்கள் பேச்சுக்களுக்கிடையில் பழமொழிகளை பயன்படுத்துகின்றனர். பழமொழிகள் நம்மை சிந்திக்கவும், சிரிக்கவும் வைக்கின்றது. வாழ்வின் மிகப் பெரிய தத்துவங்களை, எதார்த்தங்களை ஒரு வாக்கிய பழமொழிகளில் மிகவும் அழகாகச் சொல்லி விடுகின்றனர்.

இக்கட்டுரையில் மிகவும் சிறிய பழமொழியான "**சிறு துரும்பும் பல் குத்த உதவும்**" என்ற பழமொழி சொல்லும் கதையைக் கேட்போம். இப்பழமொழியோடு ஒத்துச் செல்லும் சில வாக்கியங்கள்.

"**உரு கண்டு எள்ளாமை வேண்டும்**"

"**கட்டுவோர் விலக்கிய கல்லே, வீட்டுக்கு மூலைக் கல்லாயிற்று**"

"**கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது**"

## அனுபவங்கள் உங்களுடன்...

● பக்கத்து வீட்டில் வயதான நபர் ஒருவர். யாருக்கும் அவர் வேண்டாம். நானும் அவரை ஒதுக்கியே வைத்திருந்தேன். என் உறவினர்தான். ஒரு சிரிப்பைக்கூட நான் அவரைப் பார்த்து உதிர்த்தது இல்லை. ஒரு விதத்தில் சொல்லப் போனால் அவர் தோற்றம் எனக்குப் பிடிக்காது. ஒருநாள் எங்கள் வீட்டில் பெரிய சண்டை. நான் பிறந்ததற்கு பிறக்காமலே இருந்திருக்கலாம் என்றனர் பெற்றோர். செத்துவிடலாம் போல் இருந்தது. நானும் காட்டுக் கத்தல், அடி, சண்டை. சில மணித்துளிகள் கடந்தது. வீட்டிற்கு வெளியே சென்றேன். பெரியவர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பார்த்ததும் பார்க்காதது போல் முகத்தைத் திருப்பினேன். தம்பி, இங்கே வா என்றார். அவருடைய குரலில் பாசமும், தீர்க்கமும் இருந்தது. மந்திரத்திற்கு கட்டுப்பட்டது போல அவரிடம் சென்றேன். உட்காரச் சொன்னார், உட்கார்ந்தேன். கருப்பட்டி சில் ஒன்றை கொடுத்து சாப்பிடச் சொன்னார். என்ன நடந்தது என்று ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. ஒருவேளை கேட்டிருந்தாலும் நான் கூறியிருக்க மாட்டேன். தோளில் கையைப் போட்டார். "**உன் மனதுக்குப் பிடித்ததை செய்- போ**" என்றார். அவரை உற்றுப்பார்த்தேன். எனக்குள் ஏதோ மாற்றம். நான்கு வார்த்தைகளும் மந்திர வார்த்தைகளாக எனக்குள் என்னவோ செய்தது. போக மனதில்லை. கண்களில் நீர் கசிந்தது. தன் மேல் துண்டால் கண்ணீரைத் துடைத்து விட்டார்.

நான் உபயோகம் இல்லாத நபர் என்று எண்ணியவர். உலகமே இருளாக எனக்குத் தோன்றியபோது – ஒளியை ஏற்றி – வழி காண்பித்தார். உன் மனதுக்குப் பிடித்ததைச் செய் என்ற வார்த்தைதான் என்னை மாற்றியது. சிறிய துரும்புதான் – அப்பெரியவரின் வார்த்தை என் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்தது.

● Visions India – படிக்க வைக்கும் மாணவியொருவர் பெங்களூரைச் சார்ந்தவர். அவளுடைய பெற்றோரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது பெங்களூரு வந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். எங்களுடன் வந்து தங்குங்கள் என்று அழைத்தார்கள். மனதிற்குள் நினைத்தேன், இவர்களோ பரம ஏழைகள், சொந்த வீடில்லை. சேரிப் பகுதியில் வசிக்கின்றார்கள். இவர்களால் எனக்கு என்ன செய்ய முடியும் என்று.

என் சொந்த மாமா பையன் பெங்களூரில் மாடி வீட்டில் மனைவியுடன் வசிக்கின்றான். ஐ.டி. கம்பெனியில் அவனுக்கும் அவன் மனைவிக்கும் வேலை. கை நிறைய சம்பளம். விசாலமான வீடு. என்னையும், மனைவியையும், குழந்தைகளையும் கண்டிப்பாக பெங்களூரு வரவேண்டும் என்று அழைத்தான். நாங்களும் பெங்களூரு சென்றோம். அங்கிருந்து கோவா செல்வதென முடிவு. பெங்களூரு செல்வதற்கு முன்னால் தொலைப்பேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். போனை எடுக்கவில்லை. மாமாவிடம் சொல்லி சொல்லச் சொன்னேன், பலனில்லை. பேருந்தில் ஏறியாகிவிட்டது. நானும் மனைவியும் நான்கு எண்களில் இருந்து அழைத்தும் பயனில்லை. அச்சமயம் காவிரி நீர் பிரச்சனை வேறு. இரு மாநிலங்களையும் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தது. தமிழக பேருந்துகள் – கர்நாடகத்திற்குள் செல்லவில்லை. தமிழக எல்லையிலேயே நிறுத்தி விட்டனர்.

அச்சமயம் காலை மூன்று மணி. ஏழை மாணவியின் பெற்றோர் ஞாபகத்திற்கு வந்தனர். தயக்கத்துடன் அழைத்தேன். சார் சொல்லுங்க, என்ன இந்த நேரம் – விவரித்தேன். பிரச்சனை பெரிதாக இருக்கின்றது. இங்கு நீங்கள் வர இயலாது. நாங்களும் வரமுடியாது. நாங்கள்

கூறுவதுபோல் செய்யுங்கள் என்று வழிகாட்ட ஆரம்பித்தனர். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அழைத்து விசாரித்தனர். போனிலேயே திட்டம் போட்டுக் கொடுத்தனர்.

**இவர்களால் என்ன செய்ய முடியும் என்று நினைத்தேன். ஆனால் நடந்தது வேறு... ஏழைகள் தான்... ஆனால் அன்பானவர்கள்.**

● நான் ஒரு மாணவியை பி.எஸ்.சி. நர்சிங் படிக்க உதவி இருந்தேன். படித்து முடித்த பிறகு எந்தத் தொடர்பும் இல்லை. வருடங்கள் உருண்டோடியது. அப்பாவிற்கு சென்னை அப்போலாவில் இதய அறுவை சிகிச்சை நடந்தது. அப்பாவை ICU-வில் வைத்திருந்தார்கள். டாக்டர் என்னை மட்டும் உள்ளே அழைத்தார். அப்பாவின் நிலை கண்டு தள்ளாடினேன். அப்போது என் காலை யாரோ தொட்டு கும்பிடுவதை உணர்ந்து திரும்பி என்ன சிஸ்டர் என்றேன். என்னைத் தெரியவில்லையா? இன்று நான் இங்கு நர்சாக உங்களால்தான் நின்று கொண்டிருக்கின்றேன்! என்றாள். அவளை அப்பாவுக்கு பொறுப்பாக நியமித்திருந்தார்கள். சார் கவலைப்படாதீர்கள், நான் அப்பாவைப் பார்த்துக் கொள்கின்றேன். கண்களில் கண்ணீர். டாக்டர் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

என்றோ செய்த சின்ன உதவி... அன்று அப்பாவை கவனித்திட உதவியது.

நாம் செய்கின்ற - சிறிய செயல்கள் - சிறிய மனிதர்கள் என்று நினைப்பவர்கள் - நாம் கற்கும் மாதக் கல்வி (short courses) - நம்முடைய வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிட முடியும்.

சிறு துரும்பும் பல்குத்த உதவும். பல் குத்த உதவும் **21** சிறு துரும்புகளை இப்போது பார்ப்போம்.

**1. Hello சொல்லு:** தெருவில் நடந்து செல்லும்போது, கடைகளில் பார்க்கும்போது Hello சொல்லு. இந்த ஒரு வார்த்தை உன் வாழ்க்கையை புரட்டிப்போடும் சக்தி வாய்ந்தது. நாம் சந்திக்கும் 80% நபர்கள் பொதுவாக நல்லவர்கள், கண்ணியமானவர்கள்.




நீ சொன்ன ஒரு Hello என்றாவது உனக்கு உதவும். அல்லது நீ Hello சொன்னபோது அவர்கள் விட்டுச் சென்ற ஒரு புன்முறுவல் உன்னுடைய அன்றைய தினத்தைச் பிரகாசமாக்கிடும்.

**2. புன்முறுவல்:** நாம் தவறே செய்திருக்கலாம். இடது புறம் பார்க்காமல் காரை திருப்பி யிருக்கலாம் - ஒரு புன்முறுவல். மிகவும் ஆபத்தான சூழலிலிருந்து நம்மை விடுவிக்க முடியும். தேவையற்ற விவாதங்களை தவிர்க்க உதவும். நம்மை திட்டுவதற்கு எண்ணியிருப்பார்கள். ஆனால் நம் புன்முறுவல் அவரது கோபத்தை தணித்திருக்கும். புன்முறுவலுக்கு என்ன விலை? புன்முறுவல் என்ற சிறு துரும்பு நமது வாழ்வை இனிக்க வைக்கும்.



**3. ஒரு வார்த்தை பேசு சிரித்த முகத்துடன்:** ஹோட்டலில் மேசைத் துடைக்கும் தொழிலாளி, கார் பார்க்கிங்கில் நமக்கு உதவும் காவலர், கடையில் அமர்ந்திருக்கும் கணக்கர் - இவர்கள் சிறிய வேலை செய்பவர்கள். ஆனால் மதிப்பானவர்கள். சிரித்த முகத்துடன் வணக்கம் சொல்லு. எப்படியிருக்கின்றீர்கள்? வெப்பம் அதிகமாக இல்லையா? நிறைய வேலையா? ஓரிரு வார்த்தைகள் பேசுங்கள். உங்களுக்குள் நேர்மறை சக்தி உருவாகும். காரில் ஏறி ஹோட்டலிலிருந்து சிறு தொலைவு சென்று விட்டீர்கள். காவலர் உங்கள் பின்னால் ஓடிவந்து அறைகுறையாக சாத்திய கதவை சாத்தி விடுகின்றார். உங்கள் சிரிப்பின் விலை இதுதான். உங்கள் சிரிப்பு/பாசமான ஓரிரு வார்த்தைகள் - உங்கள் பிள்ளையின், மனைவியின் உயிரைக் காப்பாற்றியிருக்கும்.





**4. செவிமடுங்கள்:** வாழ்வில் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றோம். நேரமில்லை யாருக்கும். உங்களுடன் பேச வருபவருக்கு ஆத்மார்த்தமாக செவிமடுங்கள். நீங்கள் செவிக் கொடுத்து கேட்கும்போது அவர் குணமாகின்றார். நீங்கள் மருத்துவர் ஆகின்றீர்கள். நாளை அவரது மடி உனக்குத் தேவைப்படலாம். உன் மேனேஜர் காரணமின்றி உன்னைத் திட்டும்போது நீ செவிமடுத்த அந்த நபர் 10 பேரிடமாவது நீ நல்ல மேடம்/சார் என்று சொல்வார்.

**5. பாராட்டுங்கள்:** உங்கள் பிள்ளைகளின் சின்ன செயல்களை, கணவன் மனைவியின் சிறிய செயல்களை, நண்பர்கள், உறவினர்களின் அன்பை வாயைத் திறந்து பாராட்டுங்கள். பாராட்டுவதால் உங்களுக்கு நஷ்டம் வரப்போவ தில்லை. பாராட்டுவதற்கு நீங்கள் விலைக் கொடுக்க வேண்டிய தில்லை. பாராட்டிப் பாருங்கள்... உறவுகள் மேம்படும். நீங்களும் பாராட்டப்படுவீர்கள்! அப்போது புரியும்... அதன் சுகம்.



**6. வழிகாட்டுங்கள்:** வாழ்க்கையை தொலைத்து நிற்பவர்கள் பலர். எந்தப் பாதையில் பயணிப்பது என்று அறியாமல் தவிப்பவர்கள் ஆயிரம் பேர். மாணவர்களுக்கு தெரியவில்லை என்ன படிப்பது என்று? இளையோருக்குப்


புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானங்களை மறக்காதே... அது இன்னொருமுறை உன்னை அவமானப்படாமல் காப்பாற்றும் - ஹிட்லர்

புரியவில்லை வாழ்க்கை என்றால் என்னவென்று? கணவன் மனைவிக்கு – திருமண வாழ்வின் அர்த்தம் தெரியவில்லை. வழிகாட்டுங்கள்.



பயணத்தின்போது எவ்வாறு செல்வது என்பதற்கும் உண்மையாகவே வழிகாட்டுங்கள். நீங்கள் வழி காட்டியவர்கள் ஒரு நாள் உங்களுக்கும் வழி காட்டுவார்கள்.

**7. இலக்குகளை அடைந்திட உதவுங்கள்:** நல்ல கல்லூரியில் படிக்கத் துடிக்கும் கிராமத்து மாணவனுக்கு, மாணவிக்கு சீட் எடுத்துக் கொடுங்கள். படிக்க முடியாமல் தவிப்பவர்களுக்கு பணம் கொடுத்து உதவுங்கள். நல்ல கருத்துக்களை, அறிவுரைகளை கூறுங்கள், நான் இருக்கிறேன், தைரியமாக இரு என்று சொல்லுங்கள்.



**பிறரை வலுப்படுத்தும்போது நாமும்**
**வலுப் பெறுகிறோம், கொடுக்கும்போது**
**பெறுகிறோம் - மறக்க வேண்டாம்.**

**8. தெருவில் வீசப்பட்ட அல்லது வாழும் விலங்குகளுக்கு உதவுங்கள்:** கோடை சுட்டெரிக்கிறது. தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடும் போது தெருக்களில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கு ஏது தண்ணீர்? ஏது உணவு? உங்கள் வீட்டுக்கு முன்னால் கொஞ்சம் தண்ணீர் வையுங்களேன். நேற்றுவரை உங்களைப் பார்த்து குரைத்த நாய் இன்று வாலாட்டும். பறவைகள் மகிழ்ச்சியில் பாடும், நன்றி பாராட்டும்.





**9. முதியவரை மதியுங்கள்:** ரோட்டைக் கவனக் குறைவாக கடக்கும் முதியவரை திட்டாதீர்கள். நீங்கள் ஒருநாள் வயோதிகப் பருவம் அடைவீர்கள். மதியுங்கள், மதிக்கப்படுவீர்கள்.

**10. அடுத்தவரின் உடைமைகளை மதியுங்கள்:** அடுத்தவரின் நிலத்திற்குள் அனுமதியின்றி செல்ல வேண்டாம். பிறர் மரத்தின் மீது கல்லெறிய வேண்டாம். அடுத்தவர் விலங்குகளை துன்புறுத்த வேண்டாம். அவர்கள் ஊருக்குப் போயிருந்தால் – பாதுகாப்பாய் இருங்கள். உங்கள் உடமைகளுக்கு அவர்களும் பாதுகாப்பாய் இருப்பார்கள்.




**11. வழிவிடுங்கள்:** கடினமான பொருட்களை தூக்கி வருபவர்களுக்கும், கைக்குழந்தைகளுடன் வருபவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் கதவை திறந்து விடுங்கள். பேருந்தில் முதலில் ஏற, இறங்க உதவுங்கள். இருக்கை இல்லையென்றால் உங்கள் இருக்கையை கொடுங்கள். இவைகளைச் செய்து பாருங்கள். மனதிற்குள் அப்படியொரு ஆனந்தம் பிறக்கும், நீடித்திருக்கும். அவர் பேருந்திலிருந்து இறங்கும்போது போயிட்டு வருகிறேன் என்பார். பிறந்ததின் பயனை உணர்வீர்கள்.



**12. வேலை கிடைக்க உதவுங்கள்:** உங்கள் பதவியினால், சமூக அந்தஸ்தினால் பல நிறுவனங்கள் உங்களுக்குப் பழக்கப்பட்டிருக்கும். உங்கள் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்களுக்கு அந்த கம்பெனி முதலாளியை / மேனேஜரை அறிமுகப்படுத்துங்கள். வேலை கிடைக்கட்டுமே! படிக்க இடம் கிடைக்கட்டுமே! – நீங்கள் இழந்தது எதுவும் இல்லை. நல்ல மனிதர்களைப் பெற்றிருப்பீர்கள்.



**13. வாழ்த்துங்கள்:** பிறந்தநாள், திருமண நாள், இறந்த நாள் – ஞாபகம் வைத்துக் கொண்டு ஓரிரு வார்த்தைகளைப் பேசுங்கள். உங்கள் அருகில் அவர்கள் இருந்தால் – அவர்களுக்கு ஸ்பெஷல் விருந்து ஏற்பாடு செய்யுங்கள். சின்ன சின்ன பரிசுப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளுங்கள். எத்தனை நபர்களைப் பெற்றிருப்பீர்கள். உங்கள் பிறந்த நாள் அன்று பாருங்கள் என்ன நடக்கிறது என்று. அவர்களின் அன்பான வார்த்தைகள் உங்களைக் குணப்படுத்தும், உங்களுக்கு உற்சாகம் கொடுக்கும்.




**14. பாதுகாப்பாக ஓட்டுங்கள்:** பாதுகாப்பாக வாகனம் ஓட்டுங்கள். விதிகளை மதியுங்கள். தேவையான அனைத்து

எனக்கு ஒரு மரத்தை வெட்ட எட்டு மணி நேரம் இருந்தால், அதில் ஆறு மணி நேரம் கோடாரியை கூர்மைப்படுத்துவேன்–ஆபிரகாம் லிங்கன்

சட்ட ஆவணங்களையும் வைத்திருங்கள். வேகம் வேண்டாம். ஒலி வேண்டாம். இவைகளை செய்து பாருங்கள். உங்கள் பயணம் எவ்வளவு இனிதாக அமைகின்றது என்று.




**15. குழந்தைகளுடன் இருங்கள்:** குழந்தைகளுக்குக் கதை சொல்லுங்கள். புத்தகங்களை வாசித்துக் காட்டுங்கள். கொஞ்ச நேரம் தான். அந்நேரம் எவ்வளவு சுகமானது தெரியுமா?



**16. பகிர்ந்து கொள்ளுங்கள்:** வீட்டில் தேவையில்லாத பொருட்களை இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். வீடும் அழகாக மாறும். பிறரும் பயன்பெறுவர். தேவைக்கு அதிகமாக பொருட்களை சேர்க்காமல் இருந்து பாருங்கள். உங்கள் மனம் அடையும் மகிழ்வுக்கு அளவே இருக்காது.




**17. மின்சார பயன்பாடு:** வேலை முடிந்தவுடன் உங்கள் கம்ப்யூட்டரை, விளக்குகளை, மின்விசிறிகளை அணையுங்கள். நீங்கள் 40 முதல் 100 வாட்ஸ் மின்சாரம் ஒவ்வொரு நாளும் சேமிக்கலாம். சின்ன விஷயம்தான் – நாட்டில் இயற்கை வளத்தை எதிர்கால தலைமுறைக்கு விட்டுச் செல்லலாம்.




**18. இருபக்கமும் எழுதுங்கள்:** பேப்பரில் இருபக்கமும் எழுதுங்கள். பேப்பரில்லா தொடர் பாடல்களை உருவாக்குங்கள். எத்தனை மரங்களை பாதுகாக்கின்றீர்கள் தெரியுமா?

**19. நீர் சேமிப்பு:** தேவைக்கு குளி. நீரை வீணாக்காதே. பைப்பை திறந்து விட்டுக் கொண்டு முகம் கழுவாதே. பல் துலக்காதே. நீ சேமிக்கின்ற நீர் – தண்ணீரின்றி சாகும் குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்ற உதவும்.






**20. மரம் நடு:** உன் இல்லத்தில் நடைபெறும் முக்கியமான நாட்களிலெல்லாம் மரம் நடு. ஆறு மாதம் அதைப் பாதுகாத்தால் போதும், பிறகு அது நம்மைப் பாதுகாக்கும்.

**21. இயற்கையோடு இரு:** ஆடு, பாடு, படம் வரை, கலர் பண்ணு, விளையாடு. தோட்டம் அமைத்திடு, சுத்தமாக உடை உடுத்து, இயற்கையோடு இணைந்து இரு – வாழ்வு மாறும்.



**சிறு துரும்பும் பல் குத்த உதவும்** – என்னவொரு ஆழ்ந்த சிந்தனை.

சின்னச் சின்ன செயல்கள் நம் வாழ்வை மேம்படுத்தும்.

யாரையும் ஒதுக்க வேண்டாம். பெண் தானே என்று ஏளனம் செய்ய வேண்டாம். ஏழைகள் என்று அகங்காரம் கொள்ள வேண்டாம். நோய்வாய்ப்பட்டவர்கள் என்று ஒதுக்க வேண்டாம்.

ஒருநாள் அவர்களின் தயவு நமக்கு தேவைப்படும்.

சின்ன சின்ன அர்ப்பணிப்புகள், உதவிகள், கவனிப்புகள், பாசிட்டிவான வார்த்தைகள் – மீண்டும் நமக்கு ஏதாவது ஒரு வடிவத்தில், தேவையான நேரத்தில் வந்து சேரும்.

இந்தியன் திரைப்படத்தில் வரும் பாடல் வரிகள்...

சின்னஞ்சிறு கூட்டுக்குள் சொர்க்கம் இருக்கு
அட சின்ன சின்ன அன்பில் தானே
ஜீவன் இன்னும் இருக்கு
பட்டாம் பூச்சி கூட்டத்துக்கு பட்டா எதுக்கு
அட பாசம் மட்டும் போது கண்ணே
காசு பணம் என்னத்துக்கு...

ஒரு ஹலோ, ஒரு புன்முறுவல், ஒரு சிரிப்பு, சின்னதாய் செவிமடுத்தல், சின்னதாய் ஒரு பாராட்டு, நேர்மையான வழிகாட்டுதல். முதியவரை மதிப்பது.... நம் வாழ்வை புரட்டிப்போடும், மறக்க வேண்டாம்.

**சிறு துரும்பும் பல் குத்த உதவும்**

**Please send your contributions to the following bank account:**

| | | | |
|---|---|---|---|
| Account Name | : **Visions Global Empowerment India** | | |
| Account Number | : **739601010050081** | Bank Name : | **Union Bank of India** |
| Bank Branch | : **KK Nagar, Trichy** | IFSC Code : | **UBIN0573965** |



அடுத்தவர் விருப்பதிற்கு தான் வாழ வேண்டுமென்றால் அதைவிட செத்துவிடுவது மேலானது... விவேகானந்தர்

வறுமையை வென்ற

# 'வைகிங்' ஈஸ்வரன்




எல்லா மனிதர்களும் இரண்டு கைகளோடுதான் பிறக்கிறார்கள். வாழ்க்கையில் முன்னேற மூன்றாவதாக இன்னொரு கை தேவைப்படுகிறது. அந்தக் கைதான் இந்த உலகத்தை தொடர்ந்து இயக்கிக் கொண்டிருக்கிறது. இரண்டு கைகள் இல்லாத மனிதன்கூட மூன்றாவது கையாக தன்னம்பிக்கையைக் கொண்டிருந்தால் சாதிக்க முடிகிறது. வாழ்வதற்கு அடிப்படைத் தேவையான மூன்று வேளை உணவுக்கே கஷ்டப்படுகிற நிலையிலிருந்த என்னை, தன்னம்பிக்கைத் தூக்கிவிடடது – அழுத்தம் திருத்தமாக தனது அனுபவத்தைச் சொல்கிறார் வைகிங் ஈஸ்வரன் அவர்கள்.

ஆறணா கட்டணம் கொடுத்து டவுன் பஸ்ஸில் பயணிக்க முடியாதவர், இன்று ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் வர்த்தகம் செய்கிற நிறுவனங்களின் தலைவராக உயர்ந்திருக்கிறார். ஏறத்தாழ 4,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார். ஆனந்த் ஓசரீஸ், ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், வைகிங் நிட்டர்கள், வைகிங் டெக்ஸ்டைல்ஸ், வைகிங் நெட் பிராசஸ், பிரேமானந் டெக்ஸ்டைல்ஸ் ஆகிய நிறுவனங்களின் அஸ்திவாரமும் கோபுரமும் ஈஸ்வரன்தான்.

## அறியாமையால் தொலைத்த கல்வி

அப்பாவுக்குச் சொந்தமாக இரண்டு ஏக்கர் வானம் பார்த்த பூமி இருந்தது. அதுதான் எங்களின் வாழ்வாதாரம். மழை பெய்தால் வேலை இருக்கும். மழை பொய்த்துப்போனால் சாப்பட்டுக்கே கஷ்டமாகிவிடும். எங்கப்பா என்னை அஞ்சாம் வகுப்பு வரைக்குமாவது படிக்க வெச்சிரணும்னு தலைகீழா நின்று பார்த்தார்.

என்ன ஆனாலும் பள்ளிக்கூடம் மட்டும் போகமாட்டேனு அடம்பிடித்த நாளில் இருந்து, நான் ஒரு குழந்தைத் தொழிலாளியாக மாறினேன். படிக்காம போனதுக்காக வாழ்க்கையில் பலமுறை வருத்தப்பட்டு கொண்டிருக்கிறேன். கற்ற கல்வியை முன்னேற்றதுக்கான ஏணி என்பார்கள். அறியாமையில் அந்த ஏணியை எட்டி உதைச்சிருக்கிகேனு அப்ப தெரியாது. அதற்கு நான் வாழ்க்கையில் கொடுத்த விலை ரொம்ப அதிகம்.

தொழில் செய்யும்போது சொந்தமா முடிவு எடுக்க முடியாம, அடுத்தவர்களைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலையில் தவிச்சிருக்கேன். சில தவறுகளை உணரும்போது, திருந்துவதற்கான வாய்ப்பை இழந்திருப்போம். பள்ளிக்குப் போனால், படிப்பதற்கு நிறைய கஷ்டப்பட வேண்டும் என்று தேவையில்லாமல் பயந்த நான், சின்ன வயதிலேயே வேலைக்குப் போய் ரொம்பவே கஷ்டப்பட்டேன்.

## விவசாயத்தில் தொடங்கிய வாழ்க்கை

மாடு மேய்ப்பது தொடங்கி, நிலத்தில் விவசாயம் சார்ந்த எல்லா வேலைகளையும் பத்து வயசுலேயே செஞ்சிருக்கேன். படிப்பு இல்லாத நிலையில, சலிக்காம உழைத்தால் மட்டுமே ஒரு அடியாவது முன்னேற முடியும் என்கிற உண்மையை உணர்ந்தே இருந்தேன். மாடுகட்டி ஏத்தம் இறைக்கிறதுல தொடங்கி, விதைத்து அறுவடை செய்யும் வரை விவசாயம் சார்ந்த அனைத்து வேலைகளிலும் தேர்வு வைக்காமலேயே தேர்ச்சி அடைஞ்சேன்.

விவசாயம் செய்கிறவர்களுக்கு வாழ்க்கையில் வேறு வசதிகள் கிடைக்காமல் போனாலும், உணவுக்கு கஷ்டப் படவேண்டிய நிலைமை வராது என்கின்ற நம்பிக்கையைத் தகர்த்தது பஞ்சகாலம். பஞ்சத்துல அடிபட்டவன் மாதிரி இருக்கிறாயேன்னு யாராவது சொன்னால், அதன் அர்த்தம்

எனக்கு முழுசா புரியும். பலமாக பஞ்சத்தில் அடிபட்டிருக்கிறேன். இயற்கையின் கருணை குறைந்து, மழை பொய்த்துப் போனதால் விளைச்சல் இல்லை. தங்கம் கடத்துவதுபோல, அரிசி மூட்டைகளைக் கடத்தினாங்க. அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக பதுக்கினாங்க. உணவுப் பஞ்சம் தலைவிரித்து ஆடியது. பள்ளிக்கூடம் போகாமல் தினம் வயலுக்கு வந்து கற்றுக்கொண்ட வேலை, கடைசில சோறு போடவில்லை. ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டோம். சாலையோரம் கேட்பாரற்று விளைந்து கிடக்கிற கற்றாழை கிழங்குதான் பெரும்பாலும் உணவாக இருக்கும். அப்போது வறுமையின் சின்னம் அதுதான். கற்றாழைக் கிழங்கை விடிகிற வரையில் தீயில் போட்டு எரிச்சாதான், அதை மாவாக்கி சாப்பிட முடியும்.

மாட்டுக்குக்கூட நல்ல தீனி போடணும்னு நினைக்கிற விவசாயிகளுக்கு, ரேஷன் கடையில் ரெண்டு கிலோ புழுத்த அரிசி கிடைச்சா, அதுவே அமிர்தம். ஆடு, மாடு மேய்த்தாவது பிழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் பொய்யானது. அந்த வேலைகூட கிடைக்காமல், பூமியே காஞ்சிக்கிடந்த காலம். நான் ஜல்லி உடைக்கும் வேலைக்குப் போனேன். சாப்பாடு இல்லாமல் உழைக்க, உடம்பில் தெம்பு இல்லை. உடைச்ச ஜல்லிக்கும், கிடைச்ச கூலிக்கும் இமயமலை வித்தியாசம்.

எங்கப்பா, ஏதாவது டீக்கடைக்கு வேலைக்குப் போறீயா ஈஸ்வரா?ன்னு கேட்டாரு. ஏதாவது ஒரு வேலை கிடைச்சா போதும் என்கின்ற மனநிலையில், நானும் சரிங்கய்யானு தலையாட்டினேன்.

## அம்மாச்சியின் எதிர்ப்பு



பாராட்டி, சீராட்டி வளர்த்த பேரனை, டீக்கடையில் எச்சி கிளாஸ் கழுவ அனுப்புனா சும்மா இருக்கமாட்டேன்னு கொந்தளிச் சாங்க அம்மாச்சி. அம்மாவைவிட என்னை அதிகம் நேசிச்சு, அரவணைப்பு கொடுத்த ஜீவன். அழணும்னு தோணுச்சுனா, அவங்க மடி தான் அடைக்கலம். சின்ன வயசுலயே அம்மாச்சியின் மூலம் எனக்கு அதிர்ஷ்டம் கிடைத்தது. கஷ்டங்களைக் கடந்து வரவும், முடங்கிவிடாமல் போராடி வெல்லவும் அம்மாச்சி தந்த ஆதரவும், ஊக்கமும் இந்த ஜென்மத்துக்கு மறக்க முடியாது.

டீக்கடை வேலைக்குப் போகவே கூடாது என்ற பாட்டியின் கட்டளைய ஏற்று, வேறு வேலை தேடினேன். என் சொந்த ஊரான அணைப்புதூர்ல இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவுல இருக்கிற திருப்பூரே எங்களுக்கு சிங்கப்பூர்தான். பஞ்சத்தில் சிக்கிய பல ஆயிரக்கணக்கான மக்களை மீட்ட, உழைப்பாளர்களின் சொர்க்க பூமி அது. தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் வேலைத் தேடி மக்கள் திருப்பூருக்கு வருவாங்க.

## திருப்பூரில் வேலை தேடும் படலம்

நானும் என்னுடைய வேலைத் தேடும் படலத்தை திருப்பூரில் தொடங்கும்போது எனக்கு வயது 12. ஒல்லியாகவும், குள்ளமாகவும் இருந்துகொண்டு வேலை கேட்கிற என்னை மேலிருந்து கீழாக பார்ப்பதிலிருந்தே, கண்ணு முன்னால நிக்காத என்று சொல்லாமல் சொல்லி விடுவார்கள்.

கம்பெனில சம்பளம் இல்லாம வேலை செய்யறீயானு கேட்டாங்க. டெக்ஸ்டைல்ஸ் துறையில் எந்த வேலையும் தெரியாம வேலை கேட்டால், சம்பளம் இல்லாம வேலைதான் கிடைக்கும்னு புரிஞ்சது. என்ன வேலை தெரியும்? என்று கேட்கும்போது, எந்த வேலையா இருந்தாலும் கத்துக்கிறேன் என்று நான் சொல்கிற பதிலை, முதலாளிகள் ரசிக்கலாம்.

அதற்காக வேலை தெரியாதவனுக்கு சம்பளம் தரமுடியாது. முதலில் வேலையைக் கத்துக்கலாம் என்று சம்பளம் இல்லாத வேலைக்கு ஒத்துக்கிட்டேன். ஆனால் டீ, காபி வாங்கி வருவதும். ஆபீஸை சுத்தமாகப் பெருக்கி துடைப்பதும்தான் என்னுடைய பிரதான வேலையாக இருந்தது. வேலை கற்றுக்கொள்ள நினைத்த எனக்கு ஏமாற்றம். அந்த கம்பெனி ஏற்கனவே நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்ததால், எப்போது மூடுவார்கள் என்றே தெரியாமல் இருந்தது.

## 4 மணி நேரம் நடை... திரும்பியபோது வெறுங்கை...

ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் நடந்து சென்று, பத்து மணி நேரத்துக்கும் அதிகமா கம்பெனியில் இருந்துவிட்டு, வெறுங்கையோடு வீட்டுக்குத் திரும்பி வருவேன். கிடைக்கிற இடைவெளியில், ஏகலைவனைப் போல வேலைகளை மனதில் ஏற்றி, மற்றவர்களுக்கு உதவி செய்து, கொஞ்ச கொஞ்சமாக கத்துக்கிட்டேன்.

நஷ்டத்தில் நடக்கும் நிறுவனம், கஷ்டத்தில் நகரும் என் வாழ்க்கை. இரண்டுக்கும் ஒத்தப்போகவில்லை. புளித்துப்போன கூழோ, பழைய சாதமோ கொண்டு செல்ல பளபளப்பான பித்தளை தூக்குபோசியைத் தூக்கிக் கொண்டு. கௌரவத்துக்காக வேலைக்குப் போய்வருகிற நிலையில் நான் இல்லை. திருப்பூர் நகரம் முழுவதும் வேலைத் தேடினேன்.

பெரிய போராட்டத்துக்குப் பிறகு ஒரு நிறுவனத்தில் வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். ஒரு வாரம் வேலை செய்த பிறகே முதல் வாரத்தின் கூலியாக இரண்டு ரூபாய் கொடுத்தார்கள். வாழ்க்கையில் முதன்முதலாக வாங்கிய அந்த இரண்டு ரூபாய் பரவச உணர்வைக் கொடுத்தது. சலவை நோட்டாகக் கொடுத்தார்கள். சட்டைப் பையில் வைத்த அந்த இரண்டு ரூபாய் நோட்டு கசங்கிவிடக் கூடாது என்கிற


ஒரு வட்டம் போட்டு அதற்கு வாழ நினைப்பது தப்பில்லை. ஆனால் அந்த வட்டம் தான் வாழ்க்கை என்று நடப்பதுதான் தப்பு

கவனத்தோடு வீட்டுக் கு நடந்த அந்த வெற்றி நடை இன்னும் ஞாபகம் இருக்கு.

ஏதோ சாதித்த உணர்வோடு மகிழ்ச்சியில் இருந்தேன். இரண்டாவது வாரத்தில் என்னுடைய கடுமையான உழைப்பை மதித்து மூன்று ரூபாயாக கூலியை உயர்த்தினாங்க. சந்தோஷம் சிறகடிக்க, வேலை பார்த்துக் கொண்டிருந்த என்னையும், என் வயதுள்ள சிறுவர்களையும் அழைத்து, உடனடியாக டாக்டர்கிட்ட சர்டிபிகேட் வாங்கி வர வேண்டும் என்று சொன்னாங்க.

## முதல் வேலைக்கே ஆப்பு

உனக்கு இன்னும் 16 வயது ஆகவில்லை. அதனால் நிறுவனத்தில் வேலை செய்ய முடியாது. 12 வயசுக்கெல்லாம் சர்டிபிக்கேட் தரமுடியாது. போய் ஒழுங்கா ஸ்கூல்ல படி என்று மருத்துவர் கூறிவிட்டார். சான்றிதழ் வாங்கப்போன நான்கு பேரில், எனக்கு மட்டும் சான்றிதழ் கிடைக்காமல் வேலை பறிபோனது. எந்த சந்தோஷமும் ஒரு மாசம்கூட நிலைக்க மாட்டேங்குதேன்னு எனக்கு கண்ணீர் பெருகியது.

முதல் வகுப்புகூட முடிக்காத நிலையில், 12 வயசுல எந்த வகுப்பில் சேர்ந்து நான் படிக்கிறது? மீண்டும் வேறு வேலை தேடும் முயற்சியில் இறங்கினேன். சான்றிதழ் இல்லாமல் வேலை தரும் நிறுவனத்தை தேடி அலைஞ்சேன். சார், வேலைக்கு ஆள் வேணுமா? என்று ஒரு கம்பெனியில் நான் கேட்டதைப் பார்த்து. நீதான் அந்த ஆளாடா? என்று அதட்டலுடன் கேட்டார் முதலாளி.

பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, ஆமாம் என்று தலையாட்டுகிற சிறுவனைப் பார்த்தவருக்கு, இரக்கம் வந்துவிட்டது. அவர் கம்பெனியில் ஆள் பற்றாக்குறை காரணமாகவும் என்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டார். புதிய வேலையில் புதிய பிரச்சனையை சந்தித்தேன்.

Small Thought






## இரவு 2 மணிக்கு எழுந்து...

மின்சாரப் பிரச்சனையால் திருப்பூரில் பாதி தொழிற்சாலைகள் காலை 6 மணிக்கே ஷிப்ட் தொடங்க வேண்டும் என்ற புது உத்தரவு அமலுக்கு வந்தது. அதிகாலை 4 மணிக்கு எழுந்தால்தான் 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து, காலை 8 மணிக்கு நான் திருப்பூரில் இருக்க முடியும். ஆறு மணி ஷிப்ட் என்றால் இரவு இரண்டு மணிக்கே எழுந்தாகணும். வீட்டில் மணி பார்க்க கடிகாரமே இல்லாத அளவு வறுமையான சூழல்.

என் அப்பா வானத்தில் நட்சத்திரம் பார்த்து, 2 மணிக்கு எழுப்பி விடுவார். மழைக்காலமாக இருந்தால் நட்சத்திரங்கள் தெரியாது. விடிந்துவிட்டதாக நம்பி நள்ளிரவிலேயே கிளம்பி, காலை 4 மணிக்கெல்லாம் கம்பெனி வாசலில் உட்கார்ந்து தூங்கிய அனுபவம் உண்டு. இப்படிப்பட்ட உழைப்புக்கு இரண்டேகால் ரூபாய் கூலியாகக் கிடைத்தது.

## பஸ்ஸில் பயணிக்க ஆசை...

எப்போதும் நடந்தே வேலைக்கு வருகிற எனக்கு, ஒரு நாளைக்காவது பஸ்ஸில் போய் ஊருக்குள் இறங்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. திருப்பூரில் இருந்து அணைப்புதூர் செல்வதற்கு ஆறணா கட்டணம். ஒவ்வொரு வாரமும் கூலி வாங்கும் இந்த நாளில் அந்த ஆசை எட்டிப் பார்க்கும். இன்னிக்கு மட்டும் பஸ்ஸூல ஊருக்கு போனா என்ன? என் ஆசை வந்த அடுத்த கணமே, அவ்ளோ பணம் செலவழிக்க முடியாதே என்ற யதார்த்தமும் உறைக்கும்.

இரண்டு ரூபாய் நேட்டை வீட்டில் கொடுத்துவிட்டு, நாலணாவைப் பயன்படுத்தி ஒரேயொரு முறை பஸ்ஸில் போக முடிவெடுத்தேன். திருப்பூரில் இருந்து பாதி தூரம் நடந்து சென்று, அங்கு பஸ்ஸில் ஏறினால், நாலணாவுக்கு டிக்கெட் எடுத்து ஊருக்குள் போய் இறங்கிவிடலாம் என்று கணக்கு போட்டேன். குறிப்பிட்ட நேரத்துக்குத் தான் பஸ் வசதி உண்டு. அதனால், வேலை முடிந்து பஸ்ஸுக்கு முன்னால் போய்விட வேண்டும் என்று மூச்சிரைக்க ஓடினேன். இப்போது நினைத்தாலும் கண்ணீர் வருகிற நிகழ்வு அது.




ஒரு சிறுவன் மூச்சிரைக்க ஓடுவதை மற்றவர்கள் வேடிக்கைப் பார்த்தார்கள். ஆசை துரத்த ஓடிய ஓட்டத்தில் பஸ் வருவதற்கு முன்பே போய் சேர்ந்தேன்.

## ஏமாற்றமும்... கண்ணீரும்...

பஸ்ஸில் போய் ஊர்ல இறங்கணும் என்று பெருங்கனவோடு பஸ் ஏறியவனிடம், எங்கு ஏறினாலும் அணைபுதூர் போக ஆறணா டிக்கெட் என்று கண்டக்டர் சொன்னதும், அங்கேயே கண்ணீர் வந்துவிட்டது. இரண்டனா கூடுதலாகக் கொடுக்க பணமும் இல்லை. மீண்டும் இறங்கி, நடந்தே வீட்டுக்குப் போனதும், நான் அழுவதற்காகக் காத்திருந்தது என் அம்மாச்சியின் மடி. டவுன் பஸ்ஸில் ஆசைக்காக ஒருமுறைகூட பயணிக்க முடியாத அவலம், என்னை மிகவும் பாதித்தது.

ஊரில் பூர்வீக பூமியாக இருந்த இரண்டு ஏக்கர் நிலத்தை, புதிதாக மில் கட்டுவதற்காக விற்பனைக்குக் கேட்டாங்க. சொந்த பூமியை விற்க முடியாது என்று நான் பிடிவாதமாக மறுத்தேன். ஊர்ல ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். அதைத் தடுக்கிறீயே ஈஸ்வரா. வேணும்னா உனக்கும், உன் தம்பிக்கும் இதே மில்லுல வேலை போட்டுத் தர்றோம் என்று உறுதி அளித்தார் மில் முதலாளி.

## விற்கப்பட்ட நிலமும்... அவமானமும்...

ஊரில் பலருக்கு வேலை கிடைக்கும் என்பதுடன், என்னுடைய பத்து கிலோ மீட்டர் பயணத்துக்கும் விடுதலை கிடைக்கும் என்பதால், சொந்த பூமியை விற்க ஒப்புக் கொண்டேன். எங்கள் நிலத்தில் பஞ்சாலை கட்டி, வெற்றிகரமாக ஓடத் தொடங்கியது. எனக்கும், என் தம்பிக்கும் வேலை தருவதாக சொன்னவர். எங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பலவிதமான முயற்சிகளுக்குப் பிறகு மில் முதலாளியைச் சந்தித்து எனக்கும், என் தம்பிக்கும் வேலை கேட்டேன். கட்டடம் கட்ற வேலைதான் இப்ப காலியா இருக்கு. அதை வந்து செய் என்றார் அலட்சியமாக. நீங்க சொன்னபடி வார்த்தையை காப்பாத்தலையேனு நான் கேட்டபோது, வாரக் கூலிதானே நீ. அதிகாரமா வேலை கேக்குற என்று அவமானப்படுத்தினார்.

உறவுகள் சூழ்ந்திருக்கும் சொந்த ஊரில் நடந்த இந்த அவமானம், என் வாழ்வில் ஆறாத காயமாக மாறியது. அது ஆறாத காயமல்ல, இறைவனின் தீராத கருணை என்று எனக்கு அப்போது புரியவில்லை.

.... தொடர்ச்சி அடுத்த இதழில்....



# Career Planning Questions

## உன் துறையை (அ) வேலையை திட்டமிடல்

1. நீ செய்ய விரும்பும் வேலை என்ன? அவற்றில் சிலவற்றை குறிப்பிடு.
2. நீ செய்ய விரும்பும் வேலையைப் பற்றி என்ன தெரிந்து கொள்ள விரும்புகின்றாய்?
3. நீ விரும்பும் வேலைக் குறித்து எங்கு தெரிந்து கொண்டாய்? இதற்கு காரணம் யார்?
4. நீ விரும்பும் வேலையை அடைந்திட தேவைப்படும் திறன்கள் என்ன?
5. இந்த வேலை உனது விருப்பங்களுக்கு, உனது ஆளுமைக்கு, உனது மதிப்பீடுகளுக்கு உகந்ததாக உள்ளதா?
6. நீ சிந்தனைச் செய்யும்போது, இந்த வேலை தான் உனக்கான சரியான தேர்வு என்ற தோன்றுகின்றதா?
7. இந்த வேலையில் உனது பொறுப்புகளும், கடமைகளம் எதுவாக இருக்கும்?
8. எந்த நிறுவனத்துடன், நபருக்காக வேலை செய்யலாம் என திட்டமிட்டுள்ளாய்?
9. எங்கு வாழ்வது? எங்கு வேலை பார்ப்பது? திட்டமிட்டுள்ளாயா? ஆம் என்றால் எங்கு?
10. இத்துறையில் பணியாற்றும் நபர்கள் யாரையாவது உனக்குத் தெரியுமா?
11. தொடர்புகள் மிகவும் முக்கியம். எத்தகைய தொடர்புகளை உன் வேலை நிமித்தம் ஏற்படுத்திக் கொள்ளப் போகின்றாய்?
12. உன் கனவு வேலையினை அடைந்திட நீ சந்திக்க வேண்டிய சவால்கள் என்னவாக இருக்கும்? எவைகள் உனது இலக்கை அடைந்திட தடையாக இருக்கும் என நீ கருதுகின்றாய்?
13. உனது வேலையை அடைந்திட உன்னிடம் இருக்கும் வளங்கள் என்ன?
14. எவ்வளவு சம்பளம் வாங்கிட வேண்டுமென்று கருதுகின்றாய்?
15. தற்போதைய கல்லூரி படிப்பை முடித்துவிட்டு, மேல்படிப்பு படிக்கப் போகின்றாயா? ஆம் என்றால் என்ன? ஏன்?
16. உன் மேற்படிப்புக்கு யார் உதவுவார்கள்?
17. வேலை பார்க்க ஆரம்பிக்கும் காலக்கட்டத்தில் துவக்க கால செலவினங்களுக்கு யார் உதவுவார்கள்?
18. கல்லூரி / தொழில்கல்வி முடித்துவிட்டு வேலை பார்க்க திட்டமிட்டுள்ளாயா? மேல்கல்வி செல்லும் முன் வேலை பார்ப்பாயா?
19. பாதுகாப்பு வலை – Safety net குறித்து கேள்விப் பட்டுள்ளாயா? உன் வாழ்வுக்கான பொருளாதார திட்டம் என்ன?



காதலிப்பது பெரிதல்ல... கடைசிவரை காதலிப்பதுதான் பெரிது...

**வாழ்க்கையை** – காட்சிப்படுத்திப் பார்த்ததனால் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை மகிழ்வுடன் நம்முடன் பகிர்ந்து கொள்கிறாள் **உமா!**

புன்முறுவல், தேங்காயை பிடிக்கும் விதம், அனைவரையும் மதிக்கும் தன்மை, பெற்றோருக்கு உதவும் மனப்பான்மை,படிப்பின் அர்த்தம் புரிந்த நிலை – **உமா**வை பிறரிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கின்றது.

## பட்டப்படிப்பு முடித்துவிட்டு பெற்றோருக்கு உதவியாக உழவர் சந்தையில் - இளநீர் கடை நடத்தும்

# செல்வி உமாராணி யுடன்

## ஒரு சந்திப்பு!



**உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்**

- என் பெயர் உமாராணி. என் தந்தை பெயர் சி. செல்வம். என் அம்மா – சித்ரா. என் சொந்த ஊர் திருநெலவேலி. என் சிறு வயதில் நாங்கள் திருச்சியில் குடியேறினோம். என் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை நான் திருச்சியில்தான் முடித்தேன். நான் இளங்கலை உடற்கல்வியியல் முடித்துள்ளேன்.

**உங்கள் குடும்பத்தைப் பற்றி, உங்கள் குடும்ப பொருளாதார நிலைப் பற்றி சொல்லுங்கள்**

- எங்கள் வீட்டில் அப்பா, அம்மா, நான் மற்றும் எனது தங்கை என நான்கு பேர். எனது அப்பா உழவர் சந்தையில் இளநீர் வியாபாரம் செய்கிறார். எங்களுக்கு உதவி செய்வதற்கு வேறு யாரும் இல்லை. எனது அப்பாவிற்கும் வயதாகி விட்டதால் நானும் எனது தங்கையும் தான் அவர்களுக்கு வேலையில் உதவியாக இருக்கிறோம். எங்கள் இருவரையுமே அப்பா மிகவும் சிரமப்பட்டுதான் படிக்க வைத்தார். இன்னும் படிக்க வைக்கின்றார்.

**உழவர் சந்தையில் தொழில் ஏன்? தொழில் செய்வதை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

- நாங்கள் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து இளநீர் வாங்கி விற்பதால், உழவர் சந்தையில் தொழில் செய்கிறோம். இந்தத் தொழில் செய்வது எனக்குப் பிடித்துள்ளது. நானும் இளநீர் வெட்டிக் கொடுப்பேன். இதனால் நாங்கள், விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் என அனைவருமே பயனடைகிறோம்.

**என்ன படிக்கின்றீர்கள்? ஏன் இந்தப் படிப்பை தேர்ந்தெடுத்தீர்கள்?**

- நான் இளங்கலை உடற்கல்வியியல் முடித்துள்ளேன். திருச்சி தேசிய கல்லூரியில் தான் படித்தேன். எனக்கு விளையாட்டுத் துறையின் மீது உள்ள ஆர்வத்தால் இந்த படிப்பை தேர்ந்தெடுத்தேன். பிறகு எனக்கு யோகா மற்றும் கராத்தே பயில்வதிலும் ஆர்வம் உண்டு. சிறு வயதில் இருந்தே இவற்றை பயின்றும் வருகிறேன். கராத்தேயில் Black Belt வாங்கியுள்ளேன்.

**உங்களுக்கு வாழ்வில் நம்பிக்கை கொடுத்த நிகழ்வுகள்? மனிதர்கள் யார்?**

- என் வாழ்வில் எனக்கு நம்பிக்கை கொடுத்தவர்களில் முதன்மையானவர்கள் என் பெற்றோர்கள் தான். ஏழ்மையான நிலையிலும் என்னையும் எனது தங்கையையும் எப்படியாவது உயர்ந்த நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக உற்சாகப் படுத்தினர். எனக்கு நம்பிக்கையூட்டிய இன்னொரு மனிதர் திரு. மயில்வாகனம் அவர்கள். அவர் திருச்சி மாவட்ட DCP ஆவார். அவரைப் பார்த்துதான் எனக்கு ஒரு காவல் அதிகாரி ஆக வேண்டும் என்ற எண்ணம் வந்தது. என்னால் முடியும் என்று அவரும் உற்சாகப் படுத்தினார். மேலும் ஒரு முன்னுதாரணமாக இருப்பவர் மானாமதுரையில் DSP யாக பணியாற்றும் திரு. வெள்ளைத்துரை ஆவார்.

**வாழ்வில் என்ன சாதிக்க விரும்பகின்றீர்கள்? எதற்காக?**

- என் வாழ்வில் நான் ஒரு I.P.S. அதிகாரியாக வேண்டும் என்று விரும்புகிறேன். ஏனெனில் நான் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். எனது தங்கை கமலாவிற்கு I.A.S. அதிகாரியாக வேண்டும் என்பது கனவு. நாங்கள் இருவருமே வாழ்வில் உயர்ந்த நிலைக்கு செல்ல வேண்டும் என்று விரும்புகிறோம். நான் எதிர்காலத்தில் என்னைப் போன்று ஏழ்மையில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்வேன்.

**இளையோருக்கு நீங்கள் சொல் விரும்புவது என்ன?**

- இளையோருக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் பெற்றோர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்ய வேண்டும். பெற்றோர்களின் சொல் பேச்சை நாம் கேட்க வேண்டும். ஏனெனில் நாம் நன்றாக வாழவேண்டும் என்பதற்காக தங்கள் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படுவது பெற்றோர்கள் மட்டுமே.

பின்பு இளையோர்கள் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும். எந்தத் துறையில் ஆர்வம் உள்ளதோ, அதில் முழுமையாக கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் இந்தப் போட்டி நிறைந்த உலகில் வெற்றி காண முடியும். இளையோர்கள் அனைவருமே தங்கள் கடமையை உணர்ந்து வேறெதிலும் கவனம் செலுத்தாமல் செயல்பட வேண்டும்.

என்னுடைய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

**வாழ்த்துக்கள் உமா! உங்கள் IPS கனவு மெய்படட்டும். உங்கள் தங்கை IAS ஆக எங்களது Visions நிறுவனம் சார்பாக மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!**

**என்னவாக வேண்டும்...**
**காட்சிப்படுத்துங்கள்...**
**கனவுகள் நனவாகும்...**

பேட்டி : **தே. சைலட் மோணி & கே. அன்பரசி**

# Excel™ GROUP INSTITUTIONS

SRET EXCEL

Approved by AICTE, CoA, NCTE, New Delhi & Affiliated to Anna University, TNTEU, DoTE, Chennai

Ranked 5th among the Top Engineering Colleges in Tamilnadu by Silicon India survey 2015

எக்ஸல்™

## B.E

AERO MECH CIVIL
ECE EEE CSE IT
PETROLEUM ENGINEERING
PETROCHEMICAL TECHNOLOGY

Counseling Code 2634 2664

18 University Ranks in ECE, IT, MBA & University 2nd Rank in Aeronautical



## M.E

- Aeronautical Engineering
- CAD & CAM
- Engineering Design
- Thermal Engineering
- Industrial Safety Engineering
- Environmental Engineering
- Structural Engg.
- VLSI Design
- Embedded System
- Applied Electronics
- Power Electronics & Drives
- Computer Science Engineering

31 Years Experience in TECHNICAL EDUCATION

**Counseling Code 2667**

2 University Ranks

## B. ARCH / M. ARCH

Nata Approved Exam Centre @ Excel Campus

**Counseling Code 503**

30 University Ranks

## MBA MCA

MBA 2 years, MCA Lateral - 2 years

## MBA

5 years from +2

## B.A.,B.Ed., & B.Sc.,B.Ed.,

4 years

## B. PHARM*

## PHYSIOTHERAPY*

3 / 2 Years Diploma Courses

5 State Ranks

## AUTO | MECH | CIVIL
## DECE | DEEE

## B.Ed.
## M.Ed.

901 Students Placed academic year 2015 -2016

NAAC accredited with "A" Grade

Excel Engineering Colleges - 507 Students Placed

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 Infoview | 3 Cognizant | 1 Auriga IT | 1 ExcelaCom Technologies | 5 L&T Infotech | 2 Quest |
| 18 Sutherland Global Services | 3 iNET | 2 Poornam Info Vision | 8 Shriram | 1 Vinayak Infotech | 12 Skypro |
| 1 aspire Systems | 6 digital nirvana | 8 TNQ | 23 Vee Technologies USA | 3 | 4 Unique Software Technology |
| 1 RiDSYS | 6 TDS | 21 Hicitizen Life Skills | 28 Schneider Electric | 99 CRI | 15 Allsec Technologies |
| 2 Tenneco | 27 R | 91 Zealous | 1 airtel | 57 SL Corporation | 21 Indo Shell Mould Limited |
| 22 | 1 Valued Epistemics | 1 Hitech Communications | 1 Indus Towers | 3 pricol | 5 Tensonite |

NH - 47, Salem Main Road, Pallakapalayam, Sankari West Post, Komarapalayam Tk. - 637303, Namakkal Dt.,
Near Erode / Bhavani, Ph: +91 4288 227361 to 67, Cell: 98427 13789, 99655 33370
Email: exceladmission@gmail.com, Web: www.excelinstitutions.com



கனவு

Communication Address:

Mr. D. Shylet Moni
Chief Editor

Visions Global Empowerment India
First Floor, 27, Wireless Road, Kurinji Nagar West,
K.K. Nagar, Trichy - 620 021. Cell: 89400 51900